தொகுதி : 11 இலக்கம் : 02

‘தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்’

# பெண்

R. Sivalingam's Books Collections
No: 10, Buntings Lane,
Batticaloa.

Date .................... No ....................

தொகுதி : 11 இதழ் : 02

2006

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு

# பெண்

தொகுதி : 11 இலக்கம் : 02

# 2006

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 20, டயஸ் வீதி.
மட்டக்களப்பு.

தொலைபேசி இல: 065 - 2223297

Fax No : 065 - 2224657, e-mail Suriyaw@slt.lk

**THE WOMAN** - A Journal Published by
Suriya Women's Development Centre,
No: 20 Dias Lane,
Batticaloa.

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | விஜயலட்சுமி சேகர் |
| முன் அட்டை | :- | பூநொச்சிமுனை பெண்களின் பாய்கள் |
| | | பாலை ஓலைப்பாய், கைமாறிப்பாய், முறிச்சி |
| பின் அட்டை | :- | இழைக்கும் பாய், பல்லுப்பாய். |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், |
| | | 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. |
| விலை | :- | 40/= |

# உங்களுடன்...

மீண்டும் மற்றுமொரு இதழில் நாம் சந்தித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். தொடரும் பயணங்களாய் ஒலிக்கும் சகோதரிகளின் குரல்கள் முடிவுறாது ஒலித்துக் கொண்டே இருக்கும். குடத்துள் வைத்த விளக்காய் ஊறும் எண்ணங்கள் பற்றி எரிந்து வற்றி விடாது..., அருவியாய் ... நதியாய் முடிச்சுக்குள் சிக்காத... முழுநதியாய் வெளிப்படையாய் வெளிப்படுத்திப் பயணிக்கும் "பெண்" ணின் பாதையில் பல நதிகள் முளைப்பதை நாம் எதிர்பார்க்கிறோம்.

பெண்களின் சிந்தனைகள் வெறும் சமையற்கட்டுடன், அழகுநிலையங்களுடன், கலாசார மையங்களுடன் தான் எனும் சமூக நிர்ப்பந்தத்தை தகர்த்து அவர்கள் சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் உண்மையான அர்பணிப்புடன் சமூகமாற்றத்திற்காய் விரிவதை "பெண்" சஞ்சிகை மூலம் நாம் காண்கிறோம்.

காலம் காலமாக ஒரு பக்கப் பார்வையால் பெண்ணில் பழிபோடும் சமூகத்தால் சந்ததிதோறும் ஏற்படும் விபரீத பாதக விளைவுகளை விலக்குவதற்காய் முனையும் எத்தனை பெண்கள் இன்று உள்ளார்கள். நிச்சயம் இவர்கள் சிந்தனை அடுப்பங் கரையுடனும், படுக்கையறை அலங்கரிப்புடனும் முடிச்சிடப்பட்டால், சமூகத்தில் புரையோடும் பல பிரச்சனைகளை கேள்வி கேட்பது யார்...? தூக்கியெறிய முடியாத பல கேள்விகளை பெண் சஞ்சிகை யூடாக சமூகத்தை நோக்கி இன்றுவரை முன்வைத்துக் கொண்டே செல்கிறோம்.

இவை வெறும் கனவில் விதைக்கப்பட்டவை அல்ல. வாசகர் மனதில் விதைக்கின்றோம். கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்... விமர்சனமாக... பாராட்டாக.......... இன்னுமொரு நல் மரமாக...

**அன்புடன்**
ஆசிரியை

# உள்ளே.....


- பெண்கள் மீதான வன்முறை
- பிச்சை
- சிவப்பின் அலைகளாய்
- பாலியல் தொழில்
- எதுவும் எதுவும் எதுவுமே
- பெண்ணியா கவிதைகள்
- பெண்கள் சஞ்சிகையின் தேவையும் வகைப்பாடும்
- கிரிஜா
- வீட்டுத்துறை உழைப்பு
- தண்டனைகள் தவறுதலாக
- கை நழுவும் சமாதானம்
- வித்தியாசம்
- சிரிக்கவல்ல சிந்திக்க...
- கேள்விகள்
- கடிதம்

# பெண்கள் மீதான வன்முறையும் சுரண்டலும்

**ச**மூகத்தில் பெண்கள் மீதான வன்முறைகளும் சுரண்டலும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. குறிப்பாக சொன்னால் இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு பெண்கள் மீது ஏவப் படுகின்றன. இவ் வன்முறைகள் பற் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப் படுகின்றன. பாடசாலைகளில் வேலைத்தளங்களில், வீதிகளில், வீடுகளில், மருத்துவ நிலையங்களில் எனப் பல வழிகளிலும் பெரும்பாலாக ஆண்களினாலேயே இவை கட்டவிழ்த்து விடப்படுகின்றன. பெண்கள் மீதான சுரண்டலும் வன்முறைகளும் என்று கூறும்போது உழைப்புச் சுரண்டல், உரிமைகள் சுரண்டல், பாதுகாப்புச் சுரண்டல் என பலவாறாகக் கூறலாம். இங்கு உழைப்புச் சுரண்டல் என்று கூறும்போது பெரும் பாலான பெண்கள் தமது உழைப்பினை வேலைத்தளங்களில் செலவிட்ட போதும் அவர்களது உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை. சமூகத்தில் வாழ்கின்ற பெண்கள் அனைவருமே உயர்கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பைத் தொடர்வதோ அல்லது வருவாய் தரக் கூடிய தொழில்களைச் செய்வதோ சாத்தியமற்றது. தற்போது அதிகளவில் காணப்படுகின்ற பொருளாதாரக் கஷ்டம் காரணமாக சாதாரண தரம் வரை அல்லது உயர்தரம் வரை படித்த பெண்கள் கூடியஅளவில் வேலைக்கு செல்கின்றனர்.

பெரும்பாலும் நகரப் பகுதிகளில் அழகுநிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள், தையல் நிலையங்கள், உணவுவிற்பனை நிலையங்கள், ஆடை விற்பனை நிலையங்கள், ஆடை தயாரிப்பு நிலையங்கள், போன்றவற்றில் பெரும் தொகையான பெண்கள் வேலை செய்து வருகின்றனர். காலை 9.மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை இவர்களின் கடமை நேரம் காணப்படுகின்றது. ஆனால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் மிகச் சொற்பமானதே. அவர்களிடம் இருந்து பெறப்படுகின்ற உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை . இப் பெண்களின் உழைப்பினை மூலதனமாகக் கொண்டு குறிப்பிட்ட விற்பனை நிலையங்கள் பெரும் நன்மை அடைகின்றன. அத்தோடு இவர்களுக்கான விடுமுறைநாட்கள் மிகக்குறைவாக வழங்கப்படுகின்றது. அவ்வாறின்றி விடுமுறை கோரும் வேளைகளில் தமது தொழிலை இழக்கவும் நேரிடுகின்றது. ஏனெனில்

குடும்பத்தின் வறுமையை மனதில் கொண்டு பலரும் வேலை தேடிக்கெண்டிருப்பதாலும் குறைந்த வருவாயில் பெண்களை வேலைக்கு அமர்த்துகின்றனர். ஆகவே வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள பெண்கள் இவ்வாறான சுரண்டல்களின் மத்தியில் தொழில் செய்ய வேண்டி உள்ளது. அதே சந்தர்ப்பத்தில் ஆண் தொழிலாளர்களை அமர்த்துவதாயின் அதிகளவு சம்பளம் கொடுக்க வேண்டிஇருக்கும். ஆகவே தான் முதலாளிகளும் பெண்களை வேலைக்கு அமர்த்தி தமது வருவாயை பெருக்கிக் கொள்கின்றனர்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் அனுபவிக்கின்ற மற்றொரு இம்சை பாலியல் துன்புறுத்தல்கள். நாளாந்தம் வீட்டு வேலை தொடக்கம் வேலைத் தளங்கள் வரை சென்று உழைக்கும் பெண்கள் இரட்டைச் சுமையினை சுமந்து வருகின்றனர்.தமது குடும்பப் பொருளதாரச் சுமையினை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு வேலைக்குச் செல்லும்போது வேலைத்தளங்களில் உள்ள ஆண்களாலும் மேலதிகாரிகளாலும் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்படுகின்றனர். சிலர் அவர்களின் பணபலம் உடற்பலம் ஆகியவற்றிற்கு பயந்து பணிகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. சில பெண்களின் அறியாமை, வறுமை என்பன இவ்வாறான ஆண்களிற்கு சாதகமாக அமைந்து விடுகின்றது. வெளியில் சொல்வதற்குப் பயந்து கொண்டும், வெட்கப்பட்டும், மறைந்தும் வாழ்ந்து வருகின்றனர். மேலதிகாரிகளிடமோஅல்லது காவல் நிலையங்களிலோ முறையிடும் போக்கு குறைவென்றே கூறலாம். முறையிடச் செல்வதனால் அப் பெண்களின் கௌரவம் கெட்டு விடும் என்ற கலாச்சாரக் கட்டுப்பாடு இன்றுவரை சமூகத்தில் காணப்படுகின்றது. அவ்வாறின்றி முறைப்பாடு செய்யும் சந்தர்ப் பங்களில் அவற்றிற்கான தகுந்த விசாரணைகள் மேற்கொள்வது குறைவு. பல விடயங்கள் பண பலத்தால் மறைக்கப்படுகின்றன.

பெண்களை அடக்கி வல்லுறவிற்கு உட்படுத்துகின்ற போக்கு இன்று வரை தொடர்ந்து கொண்டே வருகின்றது. பாடசாலையில் ஆசிரியர், அதிபர் மாணவிகளை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தல்., வேலைத்தளங்களில் மேலதிகாரிகள் பெண்களை பாலியல் சேட்டை களுக்கு உட்படுத்தல், மத நிறுவனங்களில் குருமார்கள்அங்கு வருகின்ற சிறுமிகளைத் தம் இச்சைக்குப் பயன்படுத்தல், வீதிகளில் நடமாடுகின்ற பெண்களை பாலியல்ரீதியாகத் துன்புறுத்தல் என இந்த பாலியல் சேட்டைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

நாளாந்த தொழில் ரீதியாகவும் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேறு தேவைகளுக்காகவும் பேருந்தில் பயணம் செய்யும் பெண்கள் அதிகளவான இம்சைக்கு உள்ளாகின்றனர். இவ்வாறான வேளைகளில் சேட்டையில் ஈடுபடும் ஆடவனை ஓர் பெண் சுட்டிக்காட்ட நேரிட்டால் பேருந்தில் உள்ளவர்கள் பிழையான கண்ணோட்டத்தில் பார்க்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே பல பெண்கள் இவ்வாறான துன்பங்களைச் சகித்துக் கொண்டும் பயந்து கொண்டும் நாளாந்தம் தம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

தற்போதுள்ள மேற்கூறப்பட்ட விடயங்கள் தவிர பல விடயங்களில் பெண்களின் நிலையை தரம் குறைக்கும் செயற்பாடுகள் பல இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. உதாரணமாக தற்போது தொலைக்காட்சிகளில் மிகப்பிரபலமாக ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் சின்னத்திரை நாடகங்கள், தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றைக் கூறலாம், இவை பெண்களை பாலியல் பிண்டங்கள் என்றுமாத்திரமே சொல்லாமல் சொல்கின்றன. மரபுரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்து பின்னர் வலுவிழந்து போன பல விடயங்களை மீளக்கட்டியெழுப்பும் செயற்பாட்டையே இச்சின்னத்திரை நாடகங்கள் செய்கின்றன. திருமண மென்பது பாலியல் உறவிற்கு மட்டுமே என்றும் ஆணின் ஸ்பரிசத்திற்காக பெண் ஏங்குவாள் என்றும் அவளைப் பாலியல் உறவினால் கட்டுப்படுத்தி விட முடியும் என்கிற கருத்துக்களை இத் தொலைக்காட்சி நாடகங்கள் தினம் தினம் ஒளிபரப்புகின்றன. பெண்கள் பாலியல் உறவில் பங்காளிகள் அல்ல. அவர்கள் போக நுகர்ச்சிப் பொருட்கள் என இவை குறிப்பாகச் சுட்டுகின்றன.

நாகரிக முன்னேற்றம் கண்டு சகல விடயங்களிலும் ஜனநாயகம் என்ற விடயம் செல்வாக்குச் செலுத்தினாலும் இன்று வரை பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள், சுரண்டல்கள் குறைந்ததாக இல்லை. இது தொடர்பாக அரச, தனியார், அரசசார்பற்ற, மதநிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய தேவை உண்டு. எனினும் பெண்களும் இவை பற்றிய தெளிவோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படத் தவறினால் இவ்வாறான சுரண்டல்கள் வன்முறைகளில் இருந்து மீள்வது கடினம்.

**குகநிதி குகநேசன்**
*கிழக்குப்பல்கலைக்கழகம்*

# பிச்சை



வெண்ணிலா தன் இரண்டரை வயது மகனை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டாள். இண்டைக்கு என்ன செய்யிறது சாப்பாட்டிற்கு, ஏற்கனவே கணவனால் கைவிடப்பட்டு 2 வருடமாக தன் மகனுடன், கஷ்டப்பட்டு, அக்கம்பக்கம் கடன்வாங்கி, வீட்டுவேலை செய்தே இவளின் வாழ்க்கை போகிறது.

இந்த 5 நாளும் எந்தவித வேலையுமின்றி, சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டாள் கடனும் கேட்கமுடியாது.

என்ன செய்வது என அறியாமலேயே தன்மகனையும் சுமந்து கொண்டு மெயின் றோட்டைநோக்கி நடக்கிறாள். அதிக தூரம் சென்ற அவளின் சிந்தனையைக் குலைத்தது அந்தக் குரல் "அம்மா ஏதாவது பிச்ச போடுங்கள்" நிமிர்ந்த அவளுக்கு வழி பிறந்தது. தன்னைப்போல் ஒரு பெண் தெருவில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தாள் பேசாமல் பிச்சை எடுத்தால் இன்றயப்பாட்டை ஒருமாதிரியாகக்கழித்து விடலாம். என யோசித்தவளுக்கு கணிரென இன்னுமொரு குரல், கம்பீரமான அந்த ஆண்குரல்.

"ஏம்மா உனக்கு கை, கால் இல்லையா இப்படிப்பிச்சை எடுப்பதை விட உழைத்து சாப்பிடலாமே இந்தகுழந்தை யோட இப்படி பிச்ச எடுக்க வெட்கமில்லை" என திட்டித்தீர்த்தது அந்த ஆண்குரல்.

சற்றும் எதிர்பாராத அந்த பேச்சில் நிலைதடுமாறிய வெண்ணிலா, அவர் பேச்சிலும் நியாயம் இருப்பதாக உணர்ந்தாள். தனக்குத்தான் அந்த ஆண் கூறியது போல இருந்தது பிச்சை எடுக்கும் தனது குறுகிய அந்த சிந்தனையை மாற்றிக்கொண்டு

அவளுக்குள்ளே ஒரு நம்பிக்கையை வளர்த்துக்கொண்டு வேகமாக நடந்தாள்.

நடந்த கால்கள் பெரிய ஒரு அரிசி ஆலையின் வாயிலில் நின்றது "இங்க போய் ஏதாவது வேலை கேட்கலாமா" என உள்ளே நுளைந்தாள்.

ஐயா வேலை ஏதும் இருந்தா கொடுங்கய்யா, கைக்குழந்தையோட கஷ்டப்படுறன். கூலி எல்லாம் பெரிசா வேண்டாம் எனக்கும் என் பிள்ளைக்கும் சாப்பாடு போட்டாலே போதும் என்றாள்.

சரி இங்கேயே இருந்து வேலை செய்வியா? வீட்டுக்கு போக எல்லாம் கேட்கக்கூடாது என பல கண்டிசன் போட்டு வேலையும் கொடுத்தார் அவளும் வேறு ஊரெண்டாலும் வேலை இருக்கே அதுபோதும் என சரிய்யா என தலையாட்டினாள்.

வெண்ணிலாவுக்கு 2 வருடத்தின் பின் ஒரு நிம்மதியான வாழ்க்கை தன் மகனின் வயிற்றுப் பசியை ஆற்ற நல்ல காலம் பிறந்து விட்டது. என எண்ணி எண்ணி மகிழ்ந்தாள்.

தான் கணவனால் கைவிடப்பட்டாலும் இப்படியும் தன் முதலாளிபோல் நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள் என நினைத்து கடவுளுக்கு நன்றி கூறினாள்.

தன் பிறந்த ஊரையே மறக்குமளவுக்கு அவள் அந்த ஊரில் நிம்மதியாக இருந்தாள் மில்லில் உள்ள ஒரு தகர வீட்டிலேயே அவள் சந்தோசமாக தன் பிள்ளையுடன் வாழ்ந்தாள்.

சுமார் ஒன்றரை வருடத்தின் பின் அவள் சொந்த ஊரிற்கு வரும் அதே மெயின் றோட்டில் வெண்ணிலா......

டேய் நம்மட வெண்ணிலாடா, என்னடா மச்சான் கையில ஒண்டு, இடுப்பில ஒண்டு. மச்சான் டேய் உன்னையும் தான் ஒரு வருசமா ஊரில நான் காணல. என்னடா, நீதானேடா அப்பா, இல்ல நம்மடா முருகனா இருக்குமோ ...? என அதே றவுடிக்

கூட்டம் அதே அவளின் வீட்டுக்கருகிலுள்ள சந்தியில் நின்று கொண்டு கேவலமாக பேசி நக்கலடித்து கேலி பண்ணினார்கள்.

வெண்ணிலாவுக்கு 30 வயதுதான். இளமையும் அழகும் நிறைந்தவள். பாடசாலையில் படிக்கும்போதே ஒருத்தனை நம்பி மணம் முடித்தாள். ஏழை என்பதால் அவனும் வயிற்றில் 6 மாதம் தன் கருவை வளரவிட்டு ஓடி விட்டான். அன்றிலிருந்தே அவள் இப்படியான நாய்களின் வசைகளை கேட்டுக்கேட்டு மனமே கல்லாய்ப் போனது.

ஆனால் இன்று அவர்களின் கிண்டல்களை தாண்டி தன் பழைய குடிலை நோக்கி நடந்தாள் தன் இரண்டுமாத கைக் குழந்தையுடன், ஒரு கிழமையும் போயிட்டு கொண்டுவந்த காசும் முடிந்தது மீண்டும்தன் பிஞ்சு மகளின் முகத்தைப் பார்க்கிறாள். முத்த மகனின் அழுகுரல் “அம்மா பசிக்குதம்மா” எனும் ஒயாதா அழுகையை நினைத்து நினைத்து மனம் வலிக்க அழுகிறாள். அந்த நிலாவைக் கீறி, கிண்டி எப்படி எல்லாம் மனிதர்கள் அதன் சுயத்தை தங்கள் சுகவாழ்வுக்காக அங்கு ஆய்வு செய்தார்களோ அதேபோல் இந்த வெண்ணிலாவையும் கீறி காயப்படுத்தி இரு ஆண்கள் தம் சுகவாழ்வை பெற்றுக்கொண்டு தன்னை சீர்குலைத்து விட்டார்களே என எண்ணி வெம்பினாள். மில் முதாலாளியால் தான் மீண்டும் ஏமாற்றப்பட்டதையும், பின் துரத்தப்பட்டதையும் நினைத்து நினைத்துப் பார்க்கிறாள்.

தன் நிலைபோல் பல பெண்கள் அவள் ஊரில் இருக்கிறார்கள். யாரிடம் இதைச் சொல்வது. வயிற்றுப் பசி வதைக்க தன் முன்னாள் சினேகிதியை சந்திக்கிறாள்.

“ஏய் வெண்ணிலா மட்டக்களப்பில் மாமாங்கம் கோயில் இண்டைக்கு கடைசிநாள். ஆடி அமவாசை தீர்த்தம். நாங்க எல்லாம் போறம்”.

நீயும் வந்தா இரண்டாயிரமாவது கிடைக்கும் அப்பா

இறந்தவர்கள் எல்லாரும் பிதிர்க்கடன் செய்து பிச்சக்காரர்களுக்கு காசும் அரிசும் போடுவாங்க. வந்தா ஒரு மாசத்துக்கு பட்டினி இல்லாம கிடக்கலாம். என்ன வாறியா? அவளின் பக்கத்து வீட்டு சீதாக்கா கூப்பிட்டாள். தன் குழந்தைகளின் முகத்தைப் பார்கிறாள்.

பசியின் வாட்டம் முகத்தில் தெரியவே எழுந்துவிட்டாள்.

ஒரு உரம் பேக்கை கையில் எடுத்துக் கொண்டாள். இரு பிள்ளைகளையும் ஒன்றைக் கையிலும் ஒன்றை இடுப்பிலும் தாங்கிக் கொண்டாள். வேகமாக நடந்தாள். மாமாங்க கோயிலடியில் அந்த சனக்கூட்டத்தில் நெருக்கியடித்து மாமாங்க குளத்தருகே சென்றாள் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தீர்த்தமாட தயாரானார்கள்.

பிள்ளையார் வீதி உலாவந்து குளத்தினுள் இறங்கினார். வெண்ணிலாவும் அந்த சேற்று நிறைந்த குளத்தினுள் தன் பிள்ளைகளுடன் இறங்கினாள். சுரியும் சேறும் நிறைந்த அந்த குளத்து நீரை அள்ளி எடுத்தாள்.

"பெண்களை மனுசனாக நினைத்து அன்பினால் அப்பா ஆனவன் மட்டும் இப் பூமியில் இருக்க ஏனைய அப்பாக்கள் எல்லாம் இன்றோடு செத்து மடியட்டும்"

இந்த வஞ்சக அப்பாக்களுக்காக நானும் என் பிள்ளைகளும் செய்யும் பிதிர்க்கடனும் கடைசிக் கடனும் ஆக இருக்கட்டும் பிள்ளையாரே" என்ற தனது கோரிக்கையுடன் அந்த சேற்று நீரை தன் தலையிலும் பிள்ளைகள் தலையிலும் வைத்து குளத்தினுள் மூழ்கினாள்

புதிய தோற்றத்துடன் கொண்டு வந்த அந்த உரப்பையை விரித்து பிச்சைக்காரர்கள் இருக்கும் வரிசையில் தன் பிள்ளைகளுடன் அமர்ந்து கொண்டாள். மறு கணமே

"அம்மா பிச்ச போடுங்க, தாயே பிச்ச போடுங்க " எனும்

குரல்களுடன் வெண்ணிலாவும் சேர்ந்து கொண்டாள் சில்லறைகள் குவிந்தன, அரிசி சிறுசிறு வரவாக குவிந்தது.

அவள் மகன் அந்த சில்லறைகளை அள்ளி இரு கைகளாலும் ஒலி எழுப்பிக் கொண்டு கேட்டான்.

"அம்மா நாம பிச்சைக்காரங்களா?"

நிதானமாக வெண்ணிலா கூறுகிறாள்' இல்லடா செல்லம்.

எப்ப இந்த பூமியில் பெண்ணின் உடலுக்கன்றி, உழைப்புக்கும் உள்ளத்திற்கும் பெறுமதி கொடுக்கிறார்களோ அன்றைக்கு உன் அம்மாவும் பணக்காரி தாண்டாஎன கூறி முடிக்கையில் எங்கோ கேட்ட குரல் அவள் அருகே

"ஏம்மா இந்த பிஞ்சுக் குழந்தைகள வெயிலில வைச்சு பிச்ச எடுக்கிறா, உனக்கு உழைச்சு சாப்பிட ஏலாதா?

சிரிக்கிறாள் "எங்கடா உன்னைப் போன்ற ஆண் சமுதாயம் எங்களைப் போன்ற பெண்களின்உழைப்பை எதிர்பார்த்தது" என கூறி ஓங்கி அறையனும் போல் இருந்தது அவளுக்கு.

கோயில் மணி ஓசை கேட்கவே அவள் கவனம் வேறுபக்கம் திரும்பியது.

– சிறிசித்திரா –

# சிவப்பின் அலைகளாய்....!

நெஞ்சின் அலைகள் நீலம் என்று
பாடிவைத்தவனை
மறுக்கிறேன்...
அவற்றின் மெய்யான நிறம் சிவப்பு...
பிறந்த போதே,
மண்ணை முத்தமிட்ட கணத்திலேயே-
'பொம்பிளைப் பிள்ளையோ ......?'
நிராகரிப்பின் உணர்வு கேள்வியாய் விழும்...
மனசின் எதுவுமே அற்ற
'வெளியில்' சினத்தின் சிவப்பு முதன்முதலில்
ஓட்டிக்கொள்ளும் ...
பள்ளிப் பராயத்தில்
இயல்பான பார்வைக்கும், துள்ளலுக்கும்
தணிக்கை அறிவிப்புகள்
வெளியாகும் தருணங்களில்
புரிய முடியாத எரிச்சலின் சிவப்பு
கோடுகள் இழுக்கும்...

கொஞ்சம் வளர்ந்து
சாலையில் இறங்குகையில்,
தசைவெறிப் பார்வைகள்
குதறும் சமயங்களில்
மனம் குன்றிடச் 'சிவப்பு'
கோபக் கனலின் கொழுந்தாக எரியும்...

விவாகப் பேச்சுகள்
அபத்தமாய் அரங்கேற
வாழ்வியலின் அர்த்தம் எதுவென்று

வீர்யமாய்க் கிளம்பும்
கேள்விகளின் விசாரத்தில்
சிவப்பின் 'உரப்பு' ஏறிட -மனமெங்கும்
செம்மையின் தகதகப்பு...

இன்னும், இன்னும்
கட்டிலில், தொட்டிலில், சமையல் அறையின்
புகைமூட்டக் கருமையில்
உறவுகளின் பொய்ம்மையில்...
'கைம்மை' விதிக்கப்பட்டவர்களின்
'விதி' எனப்படுவதன் விசர்த்தனங்களில்......
சமூக நியமங்களின் விசித்திரமான
சரிபிழை கணக்குகளில்...
அகதி முகாம்களில் அலைக்கழிப்பில் ......
தடைமுகாம் சோதனையில்...
யுத்த நெருக்கடியின் மூச்சுத்திணறுதலில்...
நெட்டித்தள்ளி அச்சுறுத்தும்
வன்முறை வன்மங்களில்...
புலம்பெயர் வாழ்வின் புதுக்கோலச் சுழிவுகளில் ....
இன்னும், இன்னும்
சிவப்பேறி என்மனம்-
நெருப்பாறிக் கிடப்பதனால்...
நெஞ்சின் அலைகளுக்கு
நிறம் சிவப்பென்ற முடிவு
என் வரையில் உண்மையானது ....!

'சங்கவை'

## தொழிலா? அல்லது பெண்கள் மீதான வன்முறையா?

வளர்ந்தவர் ஒருவர் தனது உடலை / பாலியல் ஆற்றலை இன்னொரு வளர்ந்தவருக்கு காசுக்கு விற்பது பாலியல் தொழிலாகும். வளர்ந்தவர் இருவருக்கிடையே நடைபெறும் பாலியல் பணம் (பொருள்) பரிமாற்றமாக பாலியல் வியாபாரத்தைக் கொள்ளலாம்.

இலங்கையின் மேற்குக் கரையோரப் பிரதேசங்களில் ஆயிரக் கணக்கான ஆண் சிறுவர்கள் ஓரினப் பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இது அடிப்படையில் சிறுவர் துஸ்பிரயோ கமாகும். அதேபோல் சிறுமியர் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதும் பாலியல் தொழிலாகக் கருதப்படமாட்டாது. இது சிறுமியர் மீதான வன் முறையாகும். அவ்வகையில் பாலியல் தொழில் எனும் வரையறைக்குள் இவை எவ்விதத்திலும் உள்ளடக்கப்பட மாட்டாது.

இலங்கைச் சமூகத்தில் பெண்கள் தமது பாலியலை விற்பவர் களாகவும் ஆண்கள் வாங்குபவர்களாகவும் அடையாளங் காணப்பட்டுள் ளனர். இலங்கைச் சமூகத்தில் பாலியல் தொழில் என்பது பெண்ணின் உடலை / பாலியல் ஆற்றலை வியாபரப் பொருளாக்குவதில் மையங் கொண்டுள்ளது. இவ்வாறு பாலியல் வியாபாரத்தில் ஈடுபடுவோரின் நிலைகளை (பெண்விற்பவர்- ஆண் வாங்குபவர்) இனங் காண்பதுடன் கூடவே இந்தத் துறை பற்றி பல கேள்விகள் எழுகின்றன. "ஏன் இது இவ்வாறு நடைபெறுகிறது? இது ஒரு தொழிலா அல்லது சமூக ஒழுக்க நெறியுடன் தொடர்புபட்ட ஒன்றா? அல்லது இது ஒரு சமூகத் தவறா? தவறென்றால் தவறுக்கு பொறுப்பேற்பது யார்? பாலியலை விற்கும் பெண்ணா? அல்லது அதை வாங்கும் ஆணா? மேற்குலக நாடுகளின் சட்டங்களில் பாலியல் தொழில் எவ்வாறு அணுகப்படுகிறது? இலங்கைச் சமூகத்தில் இது எவ்வாறு அணுகப்படுகிறது?" இவை புறந்தள்ளிவிட முடியாத கேள்விகளாகும். இவற்றை விவாதத்துக்குட்படுத்தி பெண்ணிலை வாத கண்ணோட்டத்தில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்வது பெண்களின் நலன்களுக்காக செயற்படும் பெண்கள், ஆண்கள் அனைவரதும் கடமை

யாகும். அவ்வடிப்படையில் எனது கருத்துக்களை "பெண்" சஞ்சிகை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விளைகிறேன்.

பாலியல் வியாபாரம் (sex trade)/ பாலியல் தொலில் (sex work) ஆனது பண்டைய தமிழ் சமூகத்தில் "தாசித் தொழில்" என்று அழைக் கப்பட்டு வந்தது. காலனித்துவ ஆட்சியுடன், ஆங்கிலேய ஆணாதிக்க விழுமியங்களுக்கமைய ஏற்படுத்தப்பட்டிருந்த சட்டங்கள் அடையாப்படுத்தப் படலாயிற்று. ஆங்கிலத்தில் Prostitute என பாலியல் தொழில் செய்யும் பெண்ணைக் குறிக்கும் சொல்லின் தமிழ் மொழியெர்ப்பே இந்த "விபச்சாரி" எனும் சொல்லாகும். பாலியல் வியாபாரத் துறையும் "விபச்சாரம்" (Prostitution) என அடையாளப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு சொல்லும் தனக்கேயான குறிப்பான அர்த்தங்களைக் கொண்டுள்ளது. குறிப்பான சமூக உறவுகளை, சமூக நிலைகளை சுட்டும் பல சொற்கள் தாம் உருவாக்கப்பட்ட காலகட்டத்தின் ஆதிக்கக் கருத்தி யலின் அடிப்படையில் அமைந்த அர்த்தங்களையும் சுமந்து கொண்டிருக் கின்றன. "விபச்சாரி" அல்லது "தாசி" எனும் பதமானது ஐதீகங்கள் நிறைந்ததாகும். பிரதானமாக பெண்ணின் குணாதிசயங்களை சித்தரிப்ப தையும் தனக்குள் உள்ளடக்கிக் கொண்டதாக இச்சொல் உள்ளது (உருவாக்கப்பட்டுள்ளது). பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்ணை சமூகப் பொதுவாழ்வில் இருந்து ஓரங்கட்டி விளிம்புக்கேத்தள்ளிவிடும் வன்மமான ஆற்றல் இச்சொல்லுக்கு உண்டு. அதனால் தான், பொதுவாகப் பெண்களை அடக்குவதற்கும் அவமதிப்பதற்கும் "வேசி", "தேவடியாள்" எனும் சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. "விபச்சாரி" "விபச்சாரம்" போன்ற சொற்களும் பெண்களை மையப்படுத்தியதாயிருப்பதுடன், இந் நடவடிக்கை பெண்களால் மேற்கொள்ளப்படும் ஒரு சமூக சீர்கேடாக சமூகத்தாலும் சட்டத்தாலும் அணுகப்படுகிறது. இவ்வாறு சமூக ஒழுங்கீனம், சீர்கேட்டுடன் தொடர்புபடுத்தி பெண்களைச் சுட்டும் விபச்சாரி எனும் சொல்லானது பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களை சமூகத்தில் மிகவும் மோசமான முறையில் அவதூறு செய்து ஒதுக்கி வைப்பதற்கும் தன்னளவில் காரணமாயுள்ளது.

பாலியல் தொழில் செய்யும் பெண்களை சமூகப் பொதுவாழ்வில் இருந்து ஓரங்கட்டுவதை இல்லாது செய்வதற்கும், அவர்கள் மீதும்

அவர்களைச் சார்ந்தோர் மீதும் படிந்திடும் சமூகக் கறைகளை நீக்கும் நோக்குடனும் விபச்சாரம், விபச்சாரி போன்ற சொற்கள் சமூகப் பாவனை யிலிருந்து அகற்றப்படலாயின. “பாலியல் தொழில்”, “பாலியல் தொழிலாளர்”, “பாலியல் வியாபாரம்” போன்ற சொற்கள் இதற்குப் பதில் அறிமுகமாயின. இந்த புதிய சொற்கள் பாலியல் தொழிலை, பெண்களின் தனிப்பட்ட ஒழுக்கம் சார்ந்த நடவடிக்கை எனும் தளத்திலிருந்து சமூகத்தின் ஒரு பொதுப் பிரச்சினை எனும் தளத்துக்குக் கொண்டு வருவதற்கு உதவியுள்ளன.

பாலியல் தொழிலை ஏனைய தொழில்களைப் போல் பார்க்க வேண்டும் எனும் கருத்து பெண்ணிலைவாதிகள் உட்பட பல்வேறு தரப்பினரிடம் காணப்படுகிறது. இந்த ஒவ்வொரு தரப்பினரதும் கருத்து நிலைகள் வேறுபட்டனவாகும். உதாரணத்துக்கு.

* பாலியல் தொழில் சமூகத்தில் நிலவுவதால் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் குறைவடையும் என்பது ஒரு சாராரின் வாதமாகும். ஆண்கள் தமது பாலியல் தேவைகளை பாலியல் தொழிலாளர் மூலம் பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைப்பதால் ஏனைய பெண்களை வன்முறைக்குள்ளாக்காது இருப்பர் என்பதே இதன் அர்த்தம்.

* ஆண்களின் பாலியல் தேவைகள் நிறைவேற்றப்படுவதால் அவர்கள் உளவியல் ஆரோக்கியத்துடன் இருப்பர். அதனால் சமூக ஒழுங்கு பேணப்படும். உற்பத்தி பெருகும்.
உண்மையில் இவை ஆணாதிக்க வகைப்பட்ட நியாயப்படுத்தல்களாகும்.

சமூக உற்பத்தியில் ஈடுபடும் மனிதக் கைகள், மூளை, இயந்திரங் களை போன்று பெண்ணின் பாலியல் உறுப்புக்களையும் உற்பத்தி சாதனமாகக் கூறுவோரும் உண்டு. தனிப்பட்ட ரீதியாக பெண்கள் ஓரங்கட்டப் படாது இருப்பதற்காக, பாலியல் தொழிலை சமூக உற்பத்தி நடவடிக்கை யுடன் இணைக்கும் நோக்குடன் இக்கருத்து முன்வைக்கப்படுகிறது.

எதுவாயினும், பாலியல் தொழிலின் அரசியலை பெண்ணியக் கண்ணோட்டத்தில் அணுகிப் புரிந்துகொள்வதன் மூலமே அது குறித்த நிலைப்பாடுகளை எடுக்க முடியும்.

மனித வரலாற்றில் பாலியல் தொழிலுக்கு ஒவ்வொரு நாட்டுக்கும் கலாசாரத்துக்கும் ஏற்ப தனியான வரலாறு உண்டு. ஆனாலும் அதன் பண்பு ஒன்றுதான். ஒரு தார மண முறையின் மூலம் பெண்ணின் பாலியல் நடவடிக்கையையும் ஒருங்கே பெண்ணின் உடலையும் ஆண்கள் கட்டுப்படுத்துகின்ற ஆணாதிக்க சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் குடும்பத்திலும் சமூகத்திலும் தனித் தனியான வகி பாகங்கள் (Gender roles) உண்டு. குடும்ப அமைப்புக்குள் பெண் ஆனவள் ஆணின் தேவைகளை நிறைவேற்றும் சேவகியாவாள். இதுவே சமூகப் பொது வாழ்விலும் நடைபெறுகிறது. ஆணின் பாலியல் தேவைகளை நிறைவேற்றும், ஆணுக்குப் பாலியல் சேவை செய்யும் சேவகியாக பெண்ணின் வகிபாகம் ஆணாதிக்க சமூக அமைப்பால் உருவாக்கப்பட்டுள்ளது. இது கருத்தியல் தளத்திலும் அன்றாட நடைமுறை வாழ்விலும் வெளிப்படுகிறது. பாலியல் தொழிலானது “பெண் ஒரு பாலியல் நுகர் பண்டம்” என்பதை மறு உற்பத்தி செய்வதாக அமைகிறது. பெண் ஆணுக்குப் பாலியல் சேவகம் செய்யப் பிறந்தவள் என்பதை மீள மீள சமூகத்தில் நிலைநிறுத்துவதாயுள்ளது.

பாலியல் தொழிலின் அடித்தளமாக பால்நிலை வகிபாகங்களும் அதன் ஆணிவேரான ஆணாதிக்க சமூக உறவுகளும் காணப்படுகின்றன. பெண் இனத்தையும் ஒட்டு மொத்த மனித குலத்தையும் ஆணாதிக்க அதிகார உறவிலிருந்து வெளிவர விடாது அதற்குள் கட்டிப்போட்டு வைத்திருக்கும் ஒரு பொறி என்றே பாலியல் தொழிலைக் கூற வேண்டியுள்ளது. சமூகப் பொதுவாழ்வில் ஆணுக்குப் பாலியல் சேவகம் செய்பவளாக பெண் இருக்கும் வரையில் ஆணாதிக்க உறவுகளிலும், ஆண்-பெண் வகிபாகங்களிலும் மாற்றம் வராது.

பெண் பாலியல் நுகர் பண்டமாக இருக்கும் சமூக அமைப்பில் பெண் விடுதலை என்பது பேச்சளவில் தான் இருக்கும்.

இவ்வாறு, பாலியல் தொழிலை கட்டமைப்பு மட்டத்தில் (Structural level) விளங்கிக்கொள்வது பொருத்தமானதெனக் காண்கிறேன்.

தனிநபர் ரீதியாக (Individual level) பார்க்கையில், பாலியல் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு தனிநபரதும் - பெண்ணினதும் வாழ்க்கைச் சூழலைக் கவனத்திற்கொள்வதாக அமையும். இவ்வடிப்படையில் பார்க்கை

யில் குறிப்பிட்ட பெண் ஏன் பாலியல் தொழிலைத் தெரிவாகக் கொள்வதற் குத் தள்ளப்படுகிறார்? இத்தொழில் அவர் தனது வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு எவ்வாறு உதவுகிறது? பாலியல் தொழிலாளர்கள் தமது தொழில் நிலைமைகளை எவ்வாறு மேம்படுத்திகொள்கின்றனர்? எவ்வாறு தமது தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்கின்றனர்? இது குறித்த அரசு சட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும்? போன்ற தனிநபர் மற்றும் நடைமுறை வாழ்வுடன் தொடர்புடைய பல கேள்விகள் உள்ளன.

இலங்கையில் பாலியல் தொழில் இன்று விரிவாக்கம் பெற்று வருவதற்கு பிரதான காரணம் வறுமையாகும். முதலாளித்துவ சுரண்டல் பொருளாதார முறையின் விரிவாக்கம், யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் போன்றன இலங்கையில் வறுமை நிலை அதிகரிப்பதற்கான காரணங்களாகும். சமூக பொருளாதார வாழ்வில் ஏற்படும் சிதைவுகளாலும் குடும்ப சுமைகள் காரணங்களாலும். சமூக பொருளாதார வாழ்வின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகையில் தான் பாலியல் தொழிலை பெண்கள் செய்யும் சூழ்நிலை ஏற்படுகிறது.

“இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையிலா பாலியல் தொழிலாளர்கள் உருவாகிறார்கள்” என கேள்வி கேட்கலாம். இங்கே “சமூக, பொருளாதார விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல்” எனக் குறிப்பிட்டது “இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலை” என்பதையல்ல. அவரவர் வாழும் வர்க்க நிலையில் விளிம்பு நிலை என்பது பொருத்தமா யிருக்கும். உதாரணத்துக்கு, நடுத்தர வர்க்கப் பெண் ஒருவருக்கு ஒரு காணித் துண்டும், வீடும், வீட்டுக்கான பொருட்களும் தொழிலை தெரிவாகக் கொள்ளலாம். அதேநேரம் இவரிலும் வறிய பெண்ணொருவர் கூலித் தொழிலாளியாக வேலை செய்து வாழ்வைக் கொண்டு நடாத்தலாம். இவற்றைப் பார்க்கும் ஒருவருக்கு, நடுத்தர வர்க்கப் பெண் பாலியல் தொழில் செய்யாது கூலித்தொழில் செய்யலாம் தானே எனும் கேள்வி நிச்சயம் எழும்.

தமது வர்க்க நிலைகளைத் தக்க வைத்துக் கொண்டு மேல் நோக்கி செல்வதற்கே மனிதர்கள் இடையறாது முயற்சிக்கின்றனர். தமது பொருளாதார நிலையைக் காப்பாற்றிக்கொள்வது தான் பாலியல் தொழிலில் ஈடுபவர்களதும் தேவையாயுள்ளது. எனவே பாலியல் தொழிலைப் பற்றி

உரையாடுகையில் சமூக வர்க்கங்களின் இயக்கப் போக்கையும் கவனத்திற் கொள்வது முக்கியமாகும்.

எதுவாயினும், பாலியல் தொழிலில் ஈடுபடும் ஒவ்வொரு பெண்ணின் வாழ்விலும் பொருளாதாரப் போராட்டத்தின் சுவடுகள் படிந்திருக்கும். பொறுப்புகளும் சுமைகளும் இருக்கும்.

இலங்கையில் மட்டுமல்ல, அமெரிக்கா, பிரித்தானியா, உட்பட ஐரோப்பிய நாடுகள் பலவும் பாலியல் தொழிலுக்கு சட்ட ரீதியாகத் தடை விதித்துள்ளன. அதனால் அங்கெல்லாம் பாலியல் தொழில் நிலவவில்லை என்று அர்த்தமாகாது. ஆணாதிக்க சமூக அமைப்பினால் உருவாக்கப் பட்டிருக்கும் பாலியல் தொழிலுக்குத் தள்ளப்பட்டதனால் மாத்திரமல்ல, ஆணாதிக்க நோக்கு நிலையிலிருந்து உருவாக்கப்பட்டுள்ள சட்டங்களாலும் பாதிக்கப்படுபவர்களாகப் பெண்களே உள்ளனர். பெண்களே குற்றவாளிகளாகக் காட்டப்பட்டு தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பாலியல் தொழில் என்பது ஆணாதிக்க சமூக உறவுகளின் காரணமாக உருவாகியிருப்பதால் அது தன்னளவில் ஒரு கட்டமைப்பாக உள்ளது. இந்தக் கட்டமைப்பை அப்படியே பேணியபடி சட்டங்களை மாத்திரம் ஏற்படுத்துவதால் பயனில்லை.

## பாலியல் தொழில் ஒரு வன்முறையா?

பாலியல் தொழில் என்பது தன்னளவில் ஒரு வன்முறையல்ல எனும் வாதம் நிலவுகிறது. எனினும், ஆணுக்குப் பாலியல் சேவகம் செய்பவர்களாக கருத்தியல் தளத்திலும் நடைமுறையிலும் பெண்களை இசைவாக்கம் செய்து வரும் - அடிமைப்படுத்தி வரும் ஒரு கட்டமைப் பெனும் வகையில் பாலியல் தொழில் என்பது கட்டமைப்பு சார் வன்முறை யாகும்.

அதேநேரம் பாலியல் தொழிலை மையப்படுத்தி நேரடியான வன்முறைகள் நடைபெறுகின்றன. பாலியல் தொழிலிலும் தொழிலுக்கு பெண்களை அச்சுறுத்தி அடிபணிய வைத்தல், கடத்துதல், உடலையும் மனதையும் துன்புறுத்துதல், வல்லுறவு புரிதல், ஆபாசப் படங்கள் தயாரித்

தல், கொலைசெய்தல் போன்றன இந்த வட்டத்துக்குள் அதிகம் நடைபெறு கின்றன. அவ்வகையில், பாலியல் தொழிலானது பெண்கள் மீதான நிலையான வன்முறைக்கான களமாக இருந்து வருகிறது.

இந்நிலையில் பாலியல் தொழிலை எவ்வாறு அணுகுவது எனும் கேள்வி எழுகிறது.

ஏற்கனவே பார்த்தது போல் பாலியல் தொழிலை கட்டமைப்பு ரீதியாகவும் தனிநபர் ரீதியாகவும் அணுக வேண்டும்.

பாலியல் தொழில் என்பது தனிமனிதத் திறனை வளர்ச்சிக் கோட்டில் இட்டுச்செல்லும் தொழிலல்ல. இந்தத் தொழில் சமூக அளவில் பெண்களுக்கு அபிவிருத்தியைத் தருவதுமல்ல. அவ்வகையில் இத்தொழில் சமூகத்தில் நிலைத்திருப்பதற்கு ஊக்கமளித்திட முடியாது.

எனினும், இதைத் தடைசெய்யும் நாடுகளின் சட்டங்கள், பாலியல் தொழிலை ஒரு சமூகக்கட்டமைப்பாகப் பார்த்து அணுகாது தனிநபரைத் தண்டிப்பதை அடிப்படையாகக் கொண்டே அணுகுகின்றன. அதனால் தான் பாலியல் தொழிலை சமூகத்திலிருந்து அகற்றுவதற்காக ஆணாதிக்க சமூக உறவுகளில் மாற்றங்களை ஊக்குவிக்காது, பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களைத் தண்டிக்கின்றன. இத்தகைய அணுகுமுறையானது பெண்களை மேலும் மேலும் விளிம்பு நிலைக்குத் தள்ளிவிடுகிறது. அத்துடன், இக்கட்டமைப்பு குறித்து சமூகத்தில் எந்தவிதக் கேள்வியும் எழாத மௌனமான சூழலையும் உருவாக்கிவிடுகிறது.

எனவே, பெண்களைக் குற்றவாளிகளாக்கித் தண்டிப்பதை நோக்காகக் கொண்ட சட்டங்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண் டும். பாலியல் தொழிலை நீண்டகாலத்தில் சமூகத்திலிருந்து இல்லாதொழிப் பதற்காக பால்நிலை சமத்துவக் கண்ணோட்டத்திலான அரச கொள்கை களே தேவை.

– ஸ்டெலா விக்டர் –

# எதுவும் எதுவும் எதுவுமே படவில்லை



தேசத்தின் வயிறாற
தேகத்தை வருத்தி
தேயிலைப் புதர்களிடை
மத்திய கிழக்கின் மனிதப் பதர்களிடை
ஆடைக் கைத்தொழில்
முதலைப் பாளிகளிடை
மாயும் பெண்டிர்தம் உழைப்பில்
உடல் வளர்த்து
தேசத்தின் காவலராய்
அதிகாரக் குதிர்முத்தி
திசை தவறித் திரிகிறது சித்தம்

இயற்கையின் அச்சுறுத்தல்கள்
சுரண்டல்காரரின் தந்திரோபாயங்கள்
அடிமைப்படுத்துபவர்களின் முகாந்திரங்கள்
எதுவும் எதுவும் எதுவுமே படவில்லை

சி. ஜெயசங்கர்

அனர்த்தங்களில் கைகொடுக்கும்
அயலவர்கள் குரல்வளைகள்
குரல்வளைகள் மட்டுமே
அர்ச்சுனப் பார்வையில் படுகிறது

# பெண்ணியா கவிதைகள்

மிக நீண்ட காலமாகக் கவிதைகள் வெறும் பிரச்சனைக்கு மட்டுமே பயன்பட்டுவந்தன. கம்பர், இளங்கோ, காளிதாசன் கவிதைகளை பன்னிப் பன்னிச் சுவைக்கும் பழம் பண்டிதப் பண்பு இன்னமும் மாறவில்லை என்றே கூறலாம். ஆனால்

மகாகவி பாரதியாரின் வருகைக்குப் பின்பு கவிதைகளுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு என்பது தெளிவாகியது. பாரதியார் கவிதைகள் சமூக எழுச்சிக்கும், நாட்டு விடுதலைக்கும் பயன்பட்டன என்பது வரலாறு.

இன்று மரபுக்கவிதைகள் மத்தியில் புதுக்கவிதைகள் ஏறு நடைபோடுகின்றன மு. மேத்தா, அப்துல்ரகுமான், வைரமுத்து போன்ற வர்கள் சமூகப்பிரக்ஞைகளுடனான புதியபாணியில்கவிதைகளை எழுதி வருகின்றனர். கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் கவிதைகள் சமூகமாற்றத்தை முனைப்பாகக் கொண்டிருந்தது. இன்றைய கவிஞர்களிலும் அவ்வாறன தாக்கங்களைக் காணலாம். பெண்ணியா கவிதைகளும் அவ்வாறே அமைந்துள்ளன.

இது பற்றி நூலின் இறுதியில் 'அனார் ' எழுதியுள்ள குறிப்பும் கோடி காட்டுகிறது. நூலில்' மூன்றாவது மனிதன்' வாடை தாராளமாகவே வீசுகின்றது. இதன் பின்னணியில் இருப்பவர் யாரோ?

இத் தொகுப்பில் "நேசம் அல்லது நெல்லிமரம் " 'மாதராய் பிறந்திட .'கல், முட்களின் கவிதைகள் , வெறுமை , உன் நினைவு, மழைநீர்... கண்ணீர், உதிரும் இலைக் கனவு, கருகுதல்களும் கனவுகளும், பச்சைக்கனவு, இருட்டு, வதைபடலம், ஓர்வானமும் ஓர்அருவமும், படியோலையின் ஒரு குரல், என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை புத்துயிர்த்தல் என்று 15 கவிதைகள் அடங்கியுள்ளன.

இக் கவிதைகள் பெரும்பாலும் அகவயமான நோக்கிலேயே அமைந்துள்ளன. அதனால் மேலோட்டமாகப் பார்க்காது ஆழமாக நோக்கினால் மட்டுமே அவற்றின் ஆழம் புரியும்..

இக் கவிதைகளின் சிறப்பம்சங்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

புதுமையான தலைப்புக்கள்
குறீயீட்டுப் பாணியிலான கவித்துவம்
புதுமையான உவமைகள், உருவகங்கள்

அநாவசிய வர்ணனைகள் இல்லாத கவிதை வரிகள்
நறுக்குத் தெரித்தாற் போன்ற நடை
சமூகப்பிரச்சனைகள் பற்றிய புதிய கண்ணோட்டம்
பெண்கள் பற்றிய சிந்தனைகள்
சிந்திக்க தூண்டும் கவி வடிவமைப்பு

கவிதைகளின் வீச்சான நடை, மொழிவண்ணம், சொற்சிக்கனம் என்பன கவிதைகளுக்கு ஒரு கம்பீரத்தை அளிக்கின்றன. மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகின்றன. இனி ஒரு சில கவிதைகளைப் பார்ப்போம்.

## நேசம் அல்லது நெல்லிமரம்

என்னையே பார்க்கும் நெல்லிமரம்
என்னவடிவாய்த்தான் உள்ளது
என் முகத்தை விட!
மழைக்காலங்களில் அடுப்பில் வைத்துக்கறுத்த
சட்டியின் நிறம் போன்ற
அதன் தண்டு அதிலிருந்து
கிளைகளாய் பிரிந்து நிற்கும் அதன்
இளம் பச்சை இலைகள்
மழைத்துளி பட்டு நிற்கும் போது
என்னவோ செய்கிறது எனை
மாலை நேரங்களில் நான்
மிகுந்த துக்கத்துடன் இருக்கும் வேளையில்
அதனூடகத்தான் பேசியும்
அழுதும் தீர்ப்பேன்
வஞ்சகமும் பொறாமையும் நிறைந்த மனிதர்களது
முகத்தை விட அந்த
நெல்லிமரத்தின் உடல்முழுக்க
அழகாகவே உள்ளது
என் தேசத்திற்குரிய நெல்லிமரம்!

ஒரு பெண்ணின் அகவயமான சிந்தனைகள் இவை. தனது

உணர்வுகளை நெல்லிமரத்துடன் பகிர்ந்து கொள்கிறாள். நெல்லிமரத்தின் முன் உட்கார்ந்திருக்கும் ஒரு பெண்ணின் வேகமும் அப்படியே மனதில் பதிந்து விடுகின்றது.

'என்னயே பார்க்கும் நெல்லிமரம்
என் முகத்தை விட வடிவாக உள்ளது'

என்ற கற்பனை கறுப்பு நிறத்திற்கான உவமை 'மழைக்காலங்களில் அடுப்பில் வைத்துக் கறுத்த சட்டியின் நிறம் போன்றது' எனும் வரிகள் இந்தப் புதுமையான உவமையை இரசிக்க வைக்கின்றது.

நான் அவாவிருந்த வாழ்வையும், என் சுதந்திரம் நுரைத்த கனவுகளையும்' எனும் வரிகள் அற்புதம்.

'சில சமயம் அவள் உணர்ந்தாள் தான் ஒரு சிலையாக்கப்பட்டிருப்பதாக' கவிதையின் இறுதியில் குவிக்கப்பட்ட பொருளைக் கல்' விளக்குகிறது.


உணர்வுகளைச் சிதைக்கும் சம்பிரதாயக் கயிற்றில் என்னைத் திரித்து வதை செய்ய வேண்டாம். அதனுள் அழகிய மனிதனாய் வாழுதல் அழிந்து அமிழ்ந்து போதல் என்னால் இயலாது போன்ற திணிக்கப்படும் சம்பிரதாயங்களில் உணர்வுகள் சிதைக்கப்படுதலை எதிர்த்து எழுதப்பட்ட வரிகள், உணர்வுகளை மிதிப்பதற்காகக் கொப்பளிக்கும் மனப் போராட்டம். அற்புதம். அருமை.

நிறைவுக் கவிதை "புத்துயிர்த்தல்"– காதலர்களின் சுதந்திரத்தைப் பாதிக்கின்ற வகையில் பெற்றோரின் வார்த்தைகள் அமைகின்றன. அவளது காதலை அது மூச்சுத்திணற வைக்கிறது. ஆனாலும் சோர்ந்து விடவில்லை. அவன் ஆயினும் வாழ்வேன். ஆச்சரியமேனும் என்னையழுத்தும் இவ் இறுகிய பார்வைகளினூடிருந்து வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்ந்தேன். நாணலை நினைவூட்டும் வரிகள், வாசகர் மனதில் நம்பிக்கை, விடாமுயற்சியை விதைக்கின்றன. இதுவே மனத்துணிவை வெளிப்படுத்தும் சமூகப்புரட்ச்சிக்கான அத்திவாரமாகும்.

இவரது தலைப்பு “என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை “! புதுமை கொப்பளிக்கும் தலைப்பு. மேலும் இவரது பணி தொடர வாழ்த்துக்கள்.

*தாமரைச்செல்வி*



# பெண்கள் சஞ்சிகைகளின் தேவையும் வகைப்பாடும்

பல துறை சார்ந்த ஊடக வளர்ச்சியின் மத்தியில் பெண்கள் சஞ்சிகைகளின் தேவை அவசியமானதொன்றாகும். இன்றைய காலகட்டத்தில் பத்திரிகைகளில் பெண்கள் பக்கங்கள் காணப்பட்ட போதிலும் பெண்களுக்கென தனியான பத்திரிகைகள் அல்லது சஞ்சிகைகள் தேவைதானா? எனப் பலரும் கேள்வி எழுப்பலாம் வரலாற்றுரீதியாக ஆண்களின் கண்ணோட்டத்துடனே நோக்கப்பட்ட பெண்களின் உணர்வுகள், பிரச்சனைகள் தாங்கி வரும் படைப்புக்களுக்கும், பெண்கள் தமது தளத்தில் இருந்து, தங்களின் உணர்வுகளில் இருந்து அவர்களாகவே வெளிப்படுத்தும் எந்தவொரு படைப்பிற்கும் இடைவெளி அதிகம். ஆதலால் யதார்த்த பூர்வமான வெளிப்படுத்துகைக்கு பெண்கள் சஞ்சிகைகள் அவசியமாகின்றது.

அரசியல், சமூக, கலாசார, பண்பாட்டு, கல்வி, பொருளாதாரம் என சகல துறைகளிலும் இரண்டாம் பட்சமாக நோக்கப்படும் பெண்கள் தம் உணர்வுகளைத் தாமே துணிச்சலுடன் வெளிப்படுத்துவது என்பது பலத்த எதிர்ப்புக்கு உள்ளான ஒன்றாகும். எனினும் இது தவிர்க்க முடியாத வரலாற்று உண்மையாகின்றது.

பெண்களுக்கென இன்று பத்திரிகையில் ஒரு பக்கம் வானொலி, தொலைக்காட்சியில் தனிநிகழ்ச்சி இருக்கும்போது பெண்கள் சஞ்சிகைகள் தேவைதானா? எனப்பலரும் விமர்சனம் தெரிவிக்கலாம். பத்திரிகைகளில் கூட தனியாக பெண்கள் பக்கம் தேவையில்லை எனச்சிலர் ஆதாரங்களுடன் வாதாடலாம். ஆனால் பெண்களுக்கான சஞ்சிகை தேவை அது இன்றைய காலத்தேவையும் கூட.

பெண்கள் சார் சஞ்சிகைகளின் தேவை குறித்து 'ஈழத்து இதழியலின் வரலாறும் மதிப்பீடும்' எனும் நூலில் திருமதி.றூபி வலன்ரினா பிரான்சிஸ் ஆய்வுக்கட்டுரை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். இக்கட்டுரையினூடாக பல விடயங்கள் தெளிவாக்கப்படுகின்றன.

பெண்களுக்கென்று சஞ்சிகைகள் தேவைதானா? என்று பலர் எழுப்பும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. பெண்களின் கருத்துச் சுதந்திரத்தை அங்கீகரிக்காத,

பெண்களுக்கென்று தனித்துவமான பிரச்சனைகள் உண்டு என்பதை ஏற்காத, பெண் பேசுவதை எழுதுவதை மரபு மீறலாகக் கருதுகின்ற, பெண்ணின் குரலை எழுத்தினூடாக சந்திக்க விரும்பாத சிலர்/பலர் இத்தகையதொரு வினாவினை எழுப்பக்கூடும்.

இவ்வினாவினை எழுப்புவோர் தம்ஆழ்மனதில் இத்தகைய சஞ்சிகைள் தேவையற்றவை என்ற எண்ணத்தை நிர்தட்சணியமாக வரித்துக்கொண்டு பொதுவான சஞ்சிகைகளிலும் இப்பெண்கள் எழுதலாம் தானே என்ற வறட்டு நியாயத்தை முன்வைப்பதையும் காணலாம்.

பெண்களுக்கென்று எழுத்துக்களம் தனியாகத் தேவை என்ற நியாயப்பாடு மேற்குறித்த பின்னணியில் தோன்றும் ஐயப்பாடுகளின் காரணமாக தோன்றியிருப்பதை மறுக்கமுடியாது. எமது பாரம்பரியத்தில் மிக நீண்ட காலமாக பெண்களுக்காகவும் ஆண்களே பேசியும் எழுதியும் வந்துள்ள நிலைமையை காணமுடிகின்றது. ஆண்களின் மொழியே பெண்களின் குரலாக அமைந்திருந்தது. தமிழ், எழுத்திலக்கியப் பாரம்பரியத்தில் தோழி, தலைவி, செவிலித்தாய், நற்றாய் எனப் படைக்கப் பட்ட பெண் பாத்திரங்களின் உணர்வு நலன்களும், அபிலாசைகளும் ஆண் புலவர்களால் தீர்மானிக்கப்பட்டு ஆணாதிக்க சிந்தனைக்கு இசைவாக வெளிப்படுத்தப்பட்டன. இதனை அடியொற்றி பெண்களின் எழுத்துக்கள் அங்கீகரிக்கப்பட்ட அதேவேளை பெண்ணிய நோக்கிலான படைப்புக்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

பெண் பேச முடியாதவளாக்கப்பட்டமை முற்கால விதி முறையாக இருந்துள்ளது. இதனை மரபுத் தமிழ் இலக்கணங்களினூடாக அறியமுடிகின்றது.

குறிப்பாக பாலியல் தொடர்பான விடயங்களை அவள் பேசுவது தடை செய்யப்பட்டிருந்தது. தொல்காப்பியரும் ஆண்களுக்கான மொழி பற்றியே குறிப்பிடுகின்றார்.

'ஐயக் கிளவி ஆடு உவிற்குரித்தே' [பொருள் 42]

என்பதிலிருந்து தலைவன் தலைவி சந்திப்பில் காட்சியை அடுத்துத் தோன்றும் ஐயம் குறித்து பேச ஆணிற்கே உரிமை உண்டென்கிறார் அவர்.

'தன்னுற வேட்கை கிளவன் முதற்கிளத்தல்
எண்ணுங் காலை கிளத்திக்கு இல்லை' [கள116]

என்பதில் காதல்ரீதியான மனஉணர்வுகள், ஆசைகளை தலைவன் முன்னிலையில் தலைவி
சொல்லக்கூடாது என்கிறார்.

'தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல்
எத்திறத்தாலும் கிழத்திக்கு இல்லை' [கற் 178]

என்பதில் தலைவன் முன் தலைவி தன்னைப் புகழ்ந்து பேசக்கூடாது என்கிறார்.

அத்துடன் ஔவையார், ஆண்டாள், காரைக்கால்அம்மையார் போன்ற பெண்பாற் புலவர்கள் தமிழ் இலக்கியங்கள் படைத்தபோதும் ஆணாதிக்க சிந்தனைக்கு வெளியே அவர்கள் பேசிய போதும் பக்தி என்ற போர்வையினால் அவை இருட்டடிப்பு செய்யப்பட்டதனையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே காலந்தோறும் தன்குரலை வெளிப்படுத்த முடியாதபடி மரபுரீதியாக அடக்கப்பட்ட பெண், சமூக அரசியல் நிலமைகளில் ஏற்படுத்திய புதிய விழிப்புணர்வு காரணமாக தனக்காக ஒரு மொழியை வரித்துக்கொண்டு தன்னை அடையாளம் காட்ட முயன்றாள். மரபு சார்ந்த பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளும் பெண்நிலைச் சிந்தனைகளை வெளியிடத் தயங்கிய அல்லது புறக்கணித்த சூழலில் பெண்களுக்கான தனித்துவ சிந்தனைகளினது தேவை உணரப்பட்டது. பெண் எவ்வித தடைகளும் அடக்கு முறைகளும் இன்றி, ஓரளவேனும் சுயாதீனமாக எழுத இச்சஞ்சிகைகள் உதவின.

பொதுவான சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் பெண்களுக்கான பக்கங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் [உதாரணமாக வியாழன் முற்றம், இவள், சக்தி முதலியன] அவை போதுமானவையாக இல்லை. இந்நிலையில் பெண்ணிலைச் சிந்தனைகளை காத்திரமான கருத்துக்களாக சமூக ஏற்புடைத்தான முறையில் பெண்ணின் மொழியினூடாகத் தருவதற்கு பிரத்தியேகமான சஞ்சிகைகள் அமைந்தமை காலங்கருதிய செயற்பாடாய் அமைய வேண்டியதாயிற்று இப்பின்னணி யிலேயே பெண்கள் சார் சஞ்சிகைகளின் தேவையை விளங்கிக்கொள்ள முடியும்.

தமிழில் மட்டுமன்றி சிங்கள ஆங்கில பத்திரிகைகளிலும் இதேநிலை தான் காணப்படுகின்றது. இத்தகைய பெண்கள் பக்கம் குறித்த அவதானங்களை சுனிலா அபயசேகர பெண்களும் வெகுஜன தொடர்பு

சாதனங்களும்[ 1995: 501-502] என்ற கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஞாயிறு வெளியீடுகள் விசேடமாக பெண்களுக்கென சில பகுதிகள் வெளியிடுகின்றன. இவற்றில் அழகுப் போட்டிகள், உடை அலங்காரப்போட்டிகள், ஆடம்பர விருந்துகள், திருமணங்கள் என்பனவற்றில் அணியப்பட்ட கவர்ச்சியான உடைகள் பற்றிய விபரங்கள் மிக விபரமாக ஆங்கில ஞாயிறு வெளியீடுகளில் எழுதப்படுகின்றன... சிங்களப் பத்திரிகைகளில் லங்காதீப ஒரு பெண்கள் பக்கம் வெளியிடுகின்றது. அதன் பெயர் 'பெண்கள் கூட்டம்' அதுவும் ஏனைய மாதர் பக்கம் போன்றது. தான்... எல்லா ஆலோசனைகளும் பெண்கள் மரபு வழியான முறைகளைப் பின்பற்றி பெண்களை கட்டுப்பாடக வாழ ஆலோசனை கூறுவன. இந்தப் பெண்கள் பகுதிக்கு ஆலோசனை எழுதுபவர்கள் ஆண்களாகவும், சமையல் குறிப்புகள், சிக்கனம், வீட்டுநிர்வாகம் போன்றவற்றை எழுதுபவர்கள் பெண்களாகவும் இருப்பதை காணலாம். பொதுவாகப் பார்க்கும்போது ஆண்கள் சற்று முக்கியமான விடயங்கள் எழுதவும், பெண்களை அவர்களது பிரிவுக்குள்ளேயே வைத்திருப்பதையும் காணலாம் என அவர் கூறுகின்றார். மேலும் அப்பத்திரிகைகளில் வெளிவரும் கேலிச்சித்திரங்களில் பெண்களை கேலிக்குரியவளாக சித்தரிப்பதையும், 1980களின் நடுப்பகுதிவரை பெண்களுக்கான வாரவெளியீடுகளிலும்

உதாரணம்- தருணி[ இளம் பெண்] 1969 தொடக்கம்
நவலிய [புதியபெண்] 1982 தொடக்கம்
ஸ்திரிகத்தா [அதிஸ்டப்பெண்]தொடக்கம்

பாரம்பரிய மரபு முறைகளுக்கு உட்பட்டனவாகவே இயங்கியமையும் அத்துடன் ஆண்களை ஆசிரியர் குழுக்களாகக் கொண்ட றெஜினா, பிரிந்தா, சொண்டுர, முதலிய வார வெளியீடுகளும் [ 1990களில் ஆரம்பத்தில் இவை வெளிவந்தன] இதனையே பின்பற்றியமையும் அவர் தனது கட்டுரையில் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறான ஒரு சூழலில் பெண்கள்சார் சஞ்சிகைகள் அத்தியாவசியமாகின்றன. எனினும் பத்திரிகைகளில் கூட பெண்கள் பக்கம் வருவதனை கேள்விப்படுத்தும் சில நிலமைகளும் எழுந்துள்ளன.

இது தொடர்பான சில கருத்துக்களை 'நிவேதினி' முதலாவது இதழில் லக்ஷ்மியின் கட்டுரையில் அவதானிக்கமுடிகின்றது.

அதாவது பெண்கள் பக்கங்கள் பெண்களுக்கான விடய தானங்களை தாங்கி வருகின்றன என்பது ஒரு புறமிருக்க பத்திரிகைகளில் மகளிர்க்கென ஒரு பக்கத்தினை ஏன் ஒதுக்கப்படல் வேண்டும்? பெண்கள் விடயத்தினை பெண்கள் தான் வாசிக்க வேண்டுமா? அவர்களின் விடயங்கள் ஆண்களுக்கு உப்புச்சப்பற்ற ஒன்றா? பெண்களின் விருப்பு, வெறுப்புக்கள், தேவைகள், எதிர்பார்ப்புக்கள் பிரச்சனைகள், ஆண் பாலரைப் பொறுத்த மட்டில் தேவையற்ற ஒன்றாகுமா? சமையல், தையல், அலங்காரம், போன்ற விடயங்களில் ஈடுபடும் ஆண்கள் இல்லையா? எனவே அவ்விடயங்கள் பத்திரிகைகளில் ஏனைய விடயங்களைப்போல் பொதுவானதாக பிரசுரிக் கப்பட வேண்டும் என மகளிர் கருத்தரங்குகளில் கடந்த சில வருடங்களா கவே ஒரு சிலரால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாக அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது[நிவேதினி–1994]

அத்துடன் இக் கருத்தினை மேலும் வலியுறுத்தும் பொருட்டு சிறு உதாரணமும் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது பெண் எழுத்தாளர் ஒருவரின் பெண்கள் பிரச்சனைகள் தொடர்பான கட்டுரையொன்று பத்திரிகையின் பெண்கள் பக்கத்தில் பிரசுரமாகியது. இக் கட்டுரை குறித்து ஒரு கல்வி மானிடம் பிரஸ்தாபிக்கப்பட்ட போது குறிப்பிட்ட திகதியில் அப்பத்திரிகையை தான் வாசித்ததாகவும் அக்கட்டுரை பெண்கள் பக்கத்தில் வந்தமையால்தான் அதனை கவனியாது விட்டிருக்கலாம் எனவும், அவர் கூறினாராம். அக்கட்டுரையைப் பொதுவான பக்கம் ஒன்றில் பிரசுரித்திருந்தால் பலரும் வாசித்திருப்பர். பெண்கள் பக்கத்தில் வந்ததால் முக்கியத்துவம் பெறாது போயிற்று என அப்பெண் வருத்தப்பட்டார் எனவும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான கருத்தோட்டங்களிலிருந்து புலப்படுவது யாதெனில் பத்திரிகையில் பெண்கள் பக்கம் தனியே அமைவதால் அப்பக்கத்தை பலரும் கண்டு கொள்ளத் தவறுகின்றார்கள். அத்துடன் அது பொதுவான விடயங்களுடன் இணைந்து வரும்போது அது அனைவரின் கவனத்திற்கும் உள்ளடக்கப்படும் என்பதாகும். இங்குதான் ஒரு கேள்வி எழுகின்றது. குறித்த கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது போன்று தந்தையாய்,

சகோதரனாய், கணவனாய், பெண்களின் வாழ்வில் பங்கேற்று ஆண்கள் வாழ்கின்றார்கள் என்றால்–பெண்கள் பக்கத்தை மட்டும் பத்திரிகைகளில் பார்ப்பதற்கு ஏன் தவறுகின்றார்கள்? இந்நிலையில் பெண்களுக்கான தனிச்சஞ்சிகைகள் வெளிவருவதை இவர்கள் எப்படி ஜீரணித்துக் கொள்வார்கள்? என்பதும் கேள்விக்கிடமாகின்றது.

மரபுவழிபட்ட பாரம்பரிய வாழ்வியலுக்குள் ஆட்பட்ட எமது தமிழ் சமூகம் பெண்கள் தன்னிச்சையாக தம் மொழியில் தம் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதனை அவ்வளவாக விரும்புவதில்லை என்பது இங்கு புலனாகின்றது.

அடுத்து சஞ்சிகைகளை நோக்கும் போது பொதுவான கலை இலக்கிய சஞ்சிகைள் பெண்களின் பிரச்சனைகளை, பெண்ணியக் கருத்துக்களை ஆழமான பார்வையில் நோக்குவது கிடையாது. ஏனெனில் அவற்றில் பல்வேறு தளங்களில் இருந்தும், பல இலக்கிய கர்த்தாக்களிடமிருந்து வெளிவரும் படைப்புக்கள் இடம்பெறுவதால் அவற்றில் பெண்கள்சார் விடயங்கள் வேர் கொண்டிருக்கும் என எதிர்பார்க்க முடியாது. சிலவேளை அச்சஞ்சிகைகள் ஆண்களால் நடாத்தப்படுவதால் கூட பெண்களின் பிரச்சனைகள் பெரிதாக பேசப்படாமல் இருக்கக் காரணமாய் அமையலாம்..

விதிவிலக்காக சில கலைஇலக்கிய சஞ்சிகைகளும் பெண்கள் சிறப்பிதழாக வெளிவந்திருப்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும் அதாவது கண்டியிலிருந்து வெளிவரும் 'ஞானம்' சஞ்சிகை –2004 மார்ச் மகளிர் தினத்தை முன்னிட்டு அது சர்வதேசமகளிர் தினச்சிறப்பிதழாக வெளிவந்தது. அவ்விதழில் பெண்கள் தொடர்பான பல விடயங்கள் – நேர்காணல், கவிதை, ஆய்வுக்கட்டுரைகள், புனைகதை என்பன இடம் பெற்றிருந்தன.

உதாரணமாக:– **நேர்காணல்**– பேராசிரியை சித்திரலேகா மௌனகுருவுடனான பத்மா சோமகாந்தனின் பேட்டி.

**கட்டுரை**– ஈழத்தில் பெண்கள் சார் தமிழ் சஞ்சிகைகள்
றூபி வலன்றினா பிரான்சிஸ்

**கட்டுரை**– ஈழத்தில் பெண் விடுதலைச் சிந்தனை வளர்ச்சியிலும், செயற்பாட்டிலும் திருகோணமலைப் பிரதேசம் – கலாநிதி. செ.யோகராசா

**கவிதை –** பெண்மைகள் – பா.மகேந்திரன்

**கட்டுரை –** பெண்களைக் கொடுமைப்படுத்திய புராண, இதிகாச நாயகர்கள் அருள்மணி.

இதில் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் ஆய்வுக்கட்டுரை களையும், இலக்கியப்படைப்புக்களையும் தந்திருப்பது சிறப்பான விடயமாக காணப்படுகின்றது.

எனவே பெண்ணியக் கருத்துக்களை வெளிப்படுத்தவும், பெண்களின் இருப்பியலைப் பேணவும், பெண்கள்சார் சஞ்சிகைகள் அவசியமானவையாகின்றன. அத்துடன் பத்திரிகைகளில் உள்ள பெண்கள் பக்கம், ஏனைய கலை, இலக்கிய சஞ்சிகைகளில் அவை ஆழமாக நோக்கப்பட்டமை போன்ற காரணங்களினாலும் பெண்கள் சார் சஞ்சிகைகளின் தேவை தவிர்க்க இயலாத ஒன்றாகிறது. அத்துடன் இன்றைய சூழலில் இலங்கையில் வளர்ந்து வரும் இளம்பெண் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடும் இச் சஞ்சிகைகளுக்கு உண்டு. மேலும் இங்கு இயங்கி வரும் பெண்கள் அமைப்புக்களும் சஞ்சிகைகள், செய்திமடல்கள் போன்றவற்றை பிரசுரிப்பதில் கவனம் செலுத்தி வருவதனையும் அவதானிக்கமுடிகின்றது.

சுதாகினி



# கிரிஜா

வானத்தில் முகில்களுக்குள் இருந்து மழையைப் பொழிவிப்பது மழைப்பழம். அந்த மழைப்பழத்தைக் களவாடி வைத்திருக்கின்றான் ஒரு கொடிய அரக்கன். அந்த அரக்கனிடமிருந்து அப்பழத்தை துணிவினாலும், புத்திசாதுாரியத்தாலும் பெற்று மீண்டும் மழையைப் பொழிய வைப்பாள் சிறுமி கிரிஜா.

கொடிய அரக்கனிடமிருந்து மழைப்பழத்தை அரசனது படைகளாலும் பறித்தெடுக்க முடியாது போக அரசன் பொது அறிவிப்புச் செய்கின்றான். 'கொடிய அரக்கனிடமிருந்து மழைப்பழத்தை மீளக் கைப்பற்றி வருபவர்களுக்கு பொற்காசுகளும், பாதி அரசும் வழங்கப் படும்' என்று பொது மக்களுக்கு பறை அறைந்து செய்தி தெரிவிக் கிறான். அவ்வாறு செய்பவர்கள் தனது அனுமதியைப் பெற்றுச் செல்ல வேண்டுமென்றும் அறிவிக்கின்றான். இச் செய்தி கேட்டு பல ஆண்கள் புறப்பட்டார்கள் மழைப்பழத்தை மீளக்கைப்பற்றி வருவோமென்று ஆனால் கொடிய அரக்கனின் மந்திர சக்தியால் அனைவருமே கல்லாக்கப்பட்டு விடுகின்றனர்.

சிறுமி கிரிஜா வீடு சிறியது. வசதிகளும் மிகவும் குறைவு. அவளுக்கு அம்மாவும் சிவண்ணா எனும் பெயருடைய ஒரு அண்ணனுமே இருந்தார்கள். எல்லா அம்மாக்களையும் போல கிரிஜாவைக் கொண்டே வேலைகள் அனைத்தையும் அவளது அம்மாவும் செய்வித்தாள். அவளது அண்ணன் நண்பர்களுடன் இருந்து விளையாடிக்கொண்டிருப்பான்.

எல்லா அம்மாக்களையும் போலவே கிரிஜாவின் அம்மாவும் ஆண்பிள்ளைக்கே அதிக உணவும் பரிமாறினாள். தூரஇடத்திலிருந்து வெயிலில் நடந்து குடத்தில் தண்ணீர் எடுத்து வருவது கூட கிரிஜாவின் வேலைதான். கிரிஜாவின் அண்ணன் புத்தகப்படிப்பில் கெட்டிக்காரனாகவும் இருந்தான். கிரிஜா தலைகீழாக வைத்து புத்தகத்தை படித்துக் கொண்டி ருந்த புத்தகத்தை நேராக்கி கொடுக்கும் அறிவு அவனுக்கிருந்தது.

அந்த அண்ணனும் தான் ஒரு வயதாக இருக்கும் பொழுது

காட்டெருமையை அடக்கியதாகவும் மூன்று வயதாக இருக்கும் போது ஊரைப் பயமுறுத்திய புலியைத் துரத்தியதாகவும் இப்பொழுது 16 வயதில் எனது பராக்கிரமம் எப்படி இருக்கும். இவை கொடிய அரக்கனிடமிருந்து மழைப்பழத்தை மீட்டுவர தனக்கு அனுமதி தரவேண்டுமென்று அரசனிடம் அனுமதி கேட்டு பெற்றுக்கொண்டு சென்றவன் ஏனையவர்கள் போலவே திரும்பவே இல்லை.

அண்ணன் எப்போது திரும்புவான் எனக் கிரிஜா பாடிக்கதை கூறும் தன் நண்பிகளிடம் கேட்கிறாள். அவர்கள் அண்ணன் கல்லாகி விட்டதையும் மழைப்பழத்தையும் கிரிஜாவால் மீட்கமுடியும் என்பதையும் கூறுகின்றனர். கிரிஜாவும் தனக்குள் சிரித்து விட்டு அரக்கனை வென்று அண்ணனையும், மழைப்பழத்தையும் மீட்டுவருவதாக அனுமதி பெற செல்கிறாள்.

அரசன் நீ சிறுமியாக இருக்கிறாய் உன்னால் அரக்கனை வெல்ல முடியாதம்மா நீ வீட்டுக்குப்போய் விளையாடி மகிழ்ந்திரு என்கிறான். சிறுமி கிரிஜாவோ வீட்டு வேலைகள் செய்பவள் நான், நீண்ட தூரம் கடும் வெயிலில் நடந்து குழத்தில் தண்ணீர் சுமந்து வருபவள் நான், விறகு முறித்து வருபவள் மேலும் கொடிய அந்த அரக்கனை உடல்பலத்தால் மட்டும் வெல்ல முடியாது புத்திசாதுரியமும் வேண்டும் எனவே என்னை அனுமதியுங்கள் என்று உறுதியாக நின்று அனுமதி பெற்றுச் செல்கிறாள்.

கதைகூறும் பெண்கள் மூவரும் சிறுமி கிரிஜாவுக்கு ஆலோசனை சில கூறி ஆனால் கிரிஜா தனியாகவே எதிர்கொள்ள வேண்டுமென்று கூறி வழியனுப்பிவைக்கிறார்கள்.

கொடிய அரக்கனின் பல்வேறு தடைகளையும் தாண்டி அவனை நேரடியாக அவனது குகையிலேயே சந்திக்கிறாள். மழைப்பழம் தருவதெனில் மூன்று புதிர்களை அவள் விடுவிக்க வேண்டும் என்று அரக்கன் நிபந்தனை போட சிறுமி கிரிஜா அதனை ஏற்றுக்கொள்கிறாள். கொடிய அரக்கனும் புதிர்களை ஒவ்வொன்றாக போடுகின்றான்.

1. மூன்று கண்களுண்டு சிவனுமில்லை
   உடல்முழுவதும் மயிர்களுண்டு கரடியுமில்லை

உச்சந்தலையில் குடுமியுண்டு தவசியுமில்லை அது என்ன?

கிரிஜா : தேங்காய்

2. காலையில் நாலு கால்களிலும். மதியத்தில் மூன்று கால் களிலும் நடக்கும் பிராணி எது?

கிரிஜா : மனிசர்


3. நுனியில் சிவப்பாகவும் அடியில் கறுப்பாகவும் இருப்பது எது?

கிரிஜா : நெருப்பு

என்று புதிர்களை ஒவ்வொன்றாக விடுவிக்க கொடிய அரசன் எரிந்து சாம்பலாகி விடுகின்றான். சிறுமி கிரிஜா மழைப்பழத்தை எடுத்துக் கொண்டு திரும்ப அரக்கனால் கல்லாக்கப்பட்டிருந்த அண்ணன் சிவாண் ணாவும் மீண்டு வருகின்றான். கிரிஜா விடயத்தைக் கூற மழைப்பழத்தை அண்ணன் சிவாண்ணா வாங்கியெடுத்துக் கொள்கின்றான்.

இருவரும் நாட்டுக்கு திரும்புகிறார்கள் அரசனிடம் நடந்ததைக் கூறுகிறான் அண்ணன் சிவாண்ணா. அரக்கனிடமிருந்து மழைப்பழத்தை தானே மீட்டதாகவும் கூறுகின்றான்.

மழைப்பழத்தை மீட்டவர் நாட்டினால் தான் மழை வரும் என்பதால், அரசன் சிவாண்ணாவை நாட்டச் சொல்கிறான். சிவண்ணாவும் மழைப்பழத்தை நாட்டுகின்றான் மழை வரவில்லை. எல்லோருக்கும் ஆச்சரியம். கடைசியில் மழைப்பழத்தை கிரிஜா பெற்றதை அறிந்து அவளையே நாட்ட சொல்ல அவளும் நாட்டுகிறாள் உடனே மழை பொழிகிறது.



மலையாளக் குறுந்திரைப்படம்.
தமிழில் – **சி.ஜெயசங்கர்**

# வீட்டுத்துறை உழைப்பு, பெறுமதி வழங்குவது யார்?

## ஒரு பால்நிலைக் கண்ணோட்ட விவாதம்!

வேலை மற்றும் உற்பத்தித்துறை பற்றிய சமூகவியற் சிந்தனைகளின் விரிவாக்கமாக வேலைத்துறை சார் விடயங்களைப் பால் நிலை நின்று விளக்குகிற, வியாக்கியானிப்புச் செய்கிற வகையில் புலமைத்துவமான ஆய்வுகளும், எழுத்துகளும் பெருமளவில் வெளிவருகின்றன. அதன் வழி, பொருளாதாரத்தையும், பால் நிலையையும் இணைத்தவாறான ஆய்வுப் பார்வையினூடு, பார்க்கப்படாத பக்கங்களும் பார்க்கப்படுவதனை அவதானிக்கலாம்.

"மனிதக் கரங்களோடு தொடர்பு கொண்ட செயற்பாடாகவும், உலகத்தோடு புறவயமான தொடர்புகளை ஏற்படுத்துவதாக அமையும் செயற்பாடே வேலை, அதன் விளைவுகள் கட்புலன் சார்ந்ததாக அமையும்" என்று வேலை பற்றிய ஓர் ஆரம்ப வரை விலக்கணத்தினை, ஹன்னாஹரன்ட் மேற்கொண்டுள்ளார் நில மானியச் சமூகமுறை உடைவுற்று, கைத்தொழில் புரட்சியின் விளைவுகள் பெருவாரியாக இடம்பெற்ற கட்டத்தில், பெண்களின் உழைப்புப் பற்றிய கருத்துகளும், சமூகநிலைமைகளும் மாற்றமுற்றன.

எவ்வாறாயினும், நீண்டகாலமாகவே, பெண்கள் வீட்டுத்துறை உழைப்புச் செயற்பாட்டுடன் பிணைக்கப்பட்டவர்களாய் காணப்படு கின்றனர். இந்நிலைமை உருவானமை தொடர்பாக, மனிதகுல வரலாற்று அம்சங்களைப் 'பால்நிலைப் பார்வையில்' மீள் கட்டவிழ்ப்புச் செய்வோரும், தந்தையாதிக்க நிலைப்பட்ட வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வோரும் ஆழமானதும், விவேகமா னதுமான பகுப்பாய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

பொருளாதாரத் துறையிலான கணிப்பீடுகள், மதிப்பீடுகள், புள்ளிவிபர ஆய்வுகள், அளவீடுகள் என்பன நீண்டகாலமாகவே ஆண்களினாற் கையாளப்பட்டு வந்திருக்கும் நிலையில், பெண்களின் வீட்டுத்துறை ஊழியமானது அலட்சியப் படுத்தப்பட்டு வந்துள்ளது. அது, பொருளாதார ரீதியிலான பெறுமானம் இல்லாத, தேசிய வருமானத் துறைக்குப் பங்களிப்புச் செய்யாததாக, பொருளாதார அசைவியக்கங்களுக்குஉட்படுத்தப்படாத ஒன்றாகப்பார்க்கப் பட்டுள்ளது. அபிவிருத்தி என்னும் எண்ணக்கருவை வெறும் எண்மயமான விருத்திச் செயன்முறையாகவும், பௌதீக நிலையிலான வளர்ச்சியுமாகவே கணிப்பிட்டுக் கொண்ட மரபுவழிப் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் இவ்விடயத்தில் ஒரு குருட்டுத்தன்மையினையே வெளிப்படுத்தி வந்திருக்கக் காணலாம்.

சென்ற நூற்றாண்டின் எழுபதுகளுக்குப் பின்னர் பெண்நிலை நோக்கிலான பொருளாதாரத்துறை கட்டியெழுப்பப்பட்ட நிலையில், சமூக மத்தியில் பேசப்படாதிருந்த இத்துறை சார் விடயங்கள் விவாதங்களாக, மீள எழுதப்படும் வரலாறுகளாக, ஆய்வுக் கண்டுபிடிப்புக்களாக, விரிவார்ந்த சொல்லாடல்களாக வெளிப்பட்டன. இதன்வழி வீடு சார்ந்த விடயங்கள் பெண்களுக்குரியனவாகக் கொள்ளப்பட்ட கருதியல் முறையின் வரலாற்றுப் பின்புலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இயற்கையுடன் உயிர்நிலையான பிணைப்பினைப் பூண்டு, மனிதகுலம் பரிணாமப் படி நிலைகளில் தவழ் நடை, பயிலத் தொடங்கிய தொல்குடிச் சமுதாயக் கால கட்டத்திலேயே “வேட்டையாடும் ஆண், உணவுசேகரிக்கும் பெண்” என்றவாறான உழைப்புச் செயன்முறையில் பால் நிலை அடிப்படையிலான பிரிப்புமுறை ஆரம்பமாகி விட்டது. இதனது தொடர்ச்சி நிலையாகவே வீட்டுத்துறைப் பணிகள் பெண்களுக்கே உரித்தானவை என்னும் சித்தாந்தம் நிலை நிறுத்தப்பட்டு, அதனை நியாயப்படுத்தும் காரணங்கள், பண்பாட்டுத்தளத்தில் இருந்து பெறப்பட்டு சமூக அங்கத்தவரிடையே கருத்தேற்றம் செய்யப் படுகின்றன.

இந்த இடத்தில் பெண்களை மட்டும் வீட்டுப்பணிகளுக்குப்

பொறுப்பானவர்களாய் ஆக்குவதற்கும், அவர்களின் உழைப்பினை தொடர்ந்தும் பெறுவதற்கும் பெண்மை, தாய்மை, பண்பாட்டுச்சின்னம் என்றுபலவாறான உணர்ச்சிபூர்வமான கருத்தியற் கட்டமைப்புகள் சமூகத்தினால், குறிப்பாக தந்தையாதிக்க முகவர்களாய்த் தொழிற்படும் சமூக நிறுவனங்களினால் உற்பத்தி ஆக்கப்படுகின்றன. உலகளாவிய வகையில் இத்தகைய எதிர்பார்ப்பு சமூகமயமாக்கப்பட்டு எழுதப்படாத நியமமாகத் தொழிற்படுதலையும் அவதானிக்கலாம்.

பல்வேறு ஆய்வுகளின் பிரகாரம், பாரிய தொழிற்பட்டறைகளில் நாள் முழுவதும் பாடுபட்டு உழைப்புச் சக்தியை வழங்கும் ஆண்களைவிட, வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்கள் அதிகளவிலான உழைப்புச்சக்தியை இழப்பதாக அறிய வந்துள்ளது. பொதுவில், இவ்வேலைகளின் வகைப்பாட்டினை எடுத்துக் கொண்டால், சமையல், சலவைசெய்தல், வீட்டுத்தூய்மை பேணுதல், குழந்தை பெறுதலும், பரமரித்தலும், வயோதிபரைக் கவனித்தல், பிள்ளைகளின் கற்றலை இலகுபடுத்தல், ஒழுங்குபடுத்தல் என்பனவாக அமைகின்றன. இவை வேலைகள் என்பதனை விட, ஒரு பெண்ணின் கடமைகளாக, அவளின் திருமண வாழ்வைக் குணாம்சப்படுத்துகின்ற விடயங்களாயும் கருதப்படுகின்றன. சமூகம் மத்தியில் பெண்களின் கல்வி, அந்தஸ்து, வர்க்கநிலை, பொருளாதாரம், இனத்துவம், சமயம், சாதியம், வயதுத்தொகுதி, பிராந்தியம் முதலான பல்வேறு படையாக்கங்களுக்கும் அப்பால், அவள் இக்கடமைகளை நிறைவேற்ற வேண்டியவளாக இருக்கிறாள். இங்கு, இவ்வீட்டு வேலைகளில் பரஸ்பர புரிந்துணர்வுடன் பங்கெடுக்கும் ஆண்களும், “பெண்டாட்டி தாசர்களாக’ முத்திரை குத்தப்படுகிற, பண்பாட்டு மேலாதிக்கம் - கால காலமாக வீட்டுவேலைகள் பெண்களுக்கே உரித்தானவை என்னும் மாயையினைத் தந்திரோயமாகக் கட்டமைத்து விடுவதனை அவதானிக்கலாம்.

தேசிய மட்டங்களில் இடம் பெறும் கணக்கெடுப்புகள், புள்ளி விபரத்திரட்டல்கள், அறிக்கைகள் போன்றவற்றிலும் வீட்டு வேலை செய்யும் பெண்கள் - வேலை அற்றவர்களாகவே, கருதப்படுதலின்

ஆழமான சமூக, பொருளாதாரத் தாக்கங்கள் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டு, விமர்சிக்கப்படுகின்றன. அவ்வாறான விமர்சனங்கள், பெண்களின் வீட்டு வேலைக்கும் பெறுமதி கணிக்கப்பட்டு, அவை தேசிய வருவாய்த்துறையினுள் உள்ளடக்கம் செய்யப்படுதலின் அவசியப்பாட்டினைக் கோரி நிற்கின்றன. பெண்களின் வீட்டுத்துறை உழைப்பு கண்ணுக்குத் தெரியாத ஒன்றாக, கவனிக்கப்படாத விடயமாக இருப்பதன் பாரபட்ச நிலைமைக்கு எதிராக முனைப்பான குரல்கள் உலக அரங்கில் இன்று வெளிப்பட்டு வருகின்றன.

பிரசன்னம் ஆகாத வேலைகளின் சமூக தாற்பரியம் பற்றி மிகத் தாக்கமான வகையிற் பேசும் அம்ரிதாபிரீதத்தின் கவிதை ஒன்று,

"எனது மனைவி வேலைக்குச் செல்வதில்லை"
அப்படி ஆயின் உலகம் ஓயாமற் சுழல்வதற்காய்
உழைப்பவர் யார்?

சமையல் செய்வதும் துணிகளைத் தோய்ப்பதும்
தண்ணீர் சுமப்பதும் யார்
...................................................................................
...................................................................................
எவரது உழைப்பு கண்ணில் படாதது?
எவரது உழைப்பு காதில் விழாதது?
சம்பளம் குறைந்ததும், சம்பளம் அற்றதும்
எவரது உழைப்பு?
எவரது உழைப்பு கணக்கெடுக்கப் படாதது?

என்ற வகையில் எமது சிந்தனையை அறைவதாய் வரயப்பட்டுள்ளது.

கவிதை மொழியின் வீரியமான கேள்விகளைப் போலவே, மேலை நாடுகளில் இத்துறை பற்றிய ஆராய்ச்சி முடிவுகள் எமக்கு வியப்பினை ஏற்படுத்துவனவாய் அமைகின்றன. அங்கு, ஆண்களை விடவும் பெண்களே வீட்டு வேலைகளுக்கும் மேலதிகமாக வாகனம் செலுத்துதல், வாகனப் பராமரிப்பு, வீட்டு நிர்மானம், திருத்தம்,

வீட்டுப்பாதுகாப்பு என்பவற்றில் அதிகம் ஈடுபடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனைவிட, சில புள்ளிவிபரங்கள், இப்பிரச்சினையின்பால், அனைவரதும் விழிகளைத் திருப்புவனவாய் உள்ளன. அந்த விபரங்கள் பின்வரும் வகையில் காணப்படுகின்றன.

* பாத்திரம் கழுவுதல், சமைத்தல், துணிகளைத் துவைத்தல், அழுத்தல் முதலான வேலைகள் சார்பில் ஒரு நிமிடத்திற்கு இழக்கப்படும் கலோரிகள்: 2-3

* வீடு பெருக்குதல், படுக்கையை நேர்த்தி செய்தல், முதலான வேலைகளின் போது, இழக்கப்படும் கலோரிகள் : 3-4

* துணிகளைச் சலவை செய்தல், நிலத்தைக் கழுவுதல் என்பவற்றில் இழக்கப்படும் கலோரிகள்: 5-6

மேற்கு நாடுகள் சார்ந்த இப்புள்ளி விபரங்கள் ஒரு உண்மையைப் புலப்படுத்துகின்றன. அங்கெல்லாம் நவீன புத்தாக்கச் சாதனங்களின் மூலம் வீட்டு வேலைகள் எளிதாக்கப்பட்டுள்ள நிலையில், எமது நாட்டினை ஒத்த விருத்தியுற்று வரும் நாடுகளின் பெண்கள், வீட்டுவேலைகளின் போது இழக்கின்ற கலோரிகள் அதிகமானதாகவே இருக்கும் என்ற உண்மையே அது.

தென்னாசிய விழுமியங்களில் மிக அதிகமானவை, தந்தையாதிக்க நலச்சார்புகளால் சூழப்பட்டுள்ள பண்பாட்டு மரபுகளில் நின்று சிந்திக்கும் போது, வீட்டுத்துறை வேலையினின்றும் பெண்கள் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்ற கோரிக்கையோ, அது பெறுமதி உடையதாக்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தலோ எவ்வாறு நோக்கப்படும் என்பது கேள்விக்குரியது.

வீட்டுத்துறை உழைப்பின் பொருட்டு பெண்களுக்குக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பில் பெண் நிலைச் சிந்தனையாளர் மத்தியிலேயே வேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. அவ்வாறு கொடுப்பனவு வழங்கும் நடைமுறையானது எவ்வழி முறைகளில் அமுலாக்கப்படும்? அவ்வாறு

அமுலாக்கப்பட்டாலும், அச்செயன்முறை, மனிதாபிமான உணர்வு களை அந்நியமயமாக்கி, குடும்பக்கட்டமைப்பின் சமூகக் கட்டொரு மைப்பாட்டினைச் சீர்குலைத்து விடாதா? மனிதர்களைப் பொருள் மயமாக மதிப்பிறக்கம் செய்து, ஒரு வகையான பணிக்குழு ஆட்சி யின் இயந்திரப் போக்கினைக் குடும்பக் கட்டமைப்பில் ஏற்படுத்தாதா? என்றவாறான பல கேள்விகளும் சில மரபு நிலைச் சிந்தனையாளர்களால் முன் வைக்கப்படுகின்றன.

இந்த இடத்தில் 'இரட்டைச்சுமை' என்கிற விடயமும் இணைத்துப் பார்க்கப்படுதல் அவசியம். மாறிவரும் பொருளாதாரக் கோலங்களின் விளைவாக, சமூக, பண்பாட்டு நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டு, இன்று அதிகளவான பெண்களும் தொழிற் றுறைகளில் ஈடுபடுகின்றனர். அலுவலக வேலைகளுக்கும் அப்பால், வீட்டுவேலையின் சுமைகளும் அவர்களை அழுத்துகின்றன. பொருளாதாரத் தேவைகளின் நிர்ப்பந்த நிலைமைகளின் அழுத்தம் காரணமாக, பெண்களை அலுவலகங்களுக்கும், பொதுத்தளங் களுக்கும், விற்பனை மையங்களுக்கும் அனுப்ப அனுமதிக்கும் தந்தையாதிக்கம் தனது கருத்தியல் நெகிழ்ச்சியையும் தனது நலன் சார்ந்தே மேற்கொள்ளும் என்ற படி- பெண்களின் வீட்டு வேலையினின்றும் அவர்களை ஆசுவாசப்படுத்தும் எந்தவொரு நியாயமாற்றங்களையும் மேற்கொள்ளாதிருப்பது சிந்திக்கற் பாலது.

மறுதலையாக நகரமயவாக்கம், பொருளாதார நெருக்கடி என்பவற்றின் விளைவால் மேற்கிளம்பிவரும் ஓரலகுக் குடும்ப முறைமையினுள், பெண்கள் இன்னும் அதிகளவான பழுவைத் தம் தோள்களில் ஏற்க நேரிடுகின்றது. பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, ஹங்கேரி, செக்குடியரசு, போலந்து, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா முதலான பல் படித்தள சமூக, பொருளாதார அமைப்பு களைக் கொண்ட பன்னிரு நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட ஓர் ஆய்வின் பிரகாரம், வீட்டுக்கு வெளியிலும் அலுவலகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள், ஒரு வாரத்திற்கு 35 மணி நேரமளவுக்கு வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறார்கள். வெளியில் வேலை செய்யாத பெண்ணோ வீட்டுவேலைகள் சார்ந்து ஐம்பது மணிநேரத்தைச் செலவிடுகிறாள். இந்திய நிலைமைகளை எடுத்துக் கொண்டால்,

சராசரியாக ஐம்பது வருட வாழ்க்கைக் காலத்தைக் கொண்ட பெண் 8.33 வருடங்களை அல்லது தன் வாழ்க்கைக் காலத்தில் 16.66 வீதத்தைச் சமையலறையில் செலவழிப்பதாகத் தெரிவிக் கின்றன. எனவே, இலங்கையின் சமூகக் கோலங்களுக்கும் பொருந் துவதாகவே இது உள்ளது. எனினும், அரசாங்கமோ, வேறு சமூகப் பொறுப்பு வாய்ந்த அமைப்புகளோ இவ்விடயத்தின் மீது கரிசனை செலுத்துவதைக் காண முடியாதுள்ளது.

அமர்த்தியா சென் முதலான பெண் நிலை நோக்கிலான பொருளியலாளர்கள் பெண்களின் உழைப்பு, பொருளாதாரத்துறைக்கான அவர்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு என்பன தொடர்பில் இன்று உலகின் கவனிப்பை ஒருங்கு திரட்டுவதில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களின் உழைப்பு வீட்டுத்துறையினுள் முடக்கப்படுவதனால், அவர்களின் ஆளுமைப்பண்பு வெளிப்பாடும், வெளி உலகு தழுவிய அறிவாற்றலும் மழுங்கடிக்கப்படுவது பற்றி எவரும் அலட்டிக் கொள்வதாக இல்லை. அத்துடன் ஓவியம், இசை, எழுத்து, மரபுக்கலைகள், நாடகம் முதலான கலை வல்லமையும், தேர்ச்சியும் பெற்ற பெண்களின் படைப்பாற்றல் சிந்தனைக்கும் வீட்டுவேலை வேட்டு வைத்து, அவர்களைச் சமூகத்தினின்றும் தனிமைப்படுத்தி விடுகின்றன. பதிலாகப் பெண்ணுக்குச் சோர்வையும், களைப்பினையும், வாழ்தலில் சுவாரஷ்யமின்மையினையும் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைக் காலத்தை நெரிக்கின்றன.


எனவே பண்பாட்டுத்தளம் என்ற பூசிமெழுகுதலில் இப்பிரச்சினையின் தீவிரபரிணாமத்தை ஒடுக்கி விளைதிறன் மிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இப்பிரச்சினைபற்றி சமூக அக்கறையை ஒன்று குவித்து வீட்டுவேலை என்ற விடயத்தை பால்சிலைப் பிரிப்பு முறைக்கும், மேலாதிக்க விழுமியங்களுக்கும் அப்பால் - இன்றைய சமூகமாற்றங்களுக்கு இசைவாக - எப்படி ஒரு நேரியற்போக்கில் "பால் நிலைச் சமத்துவத்திற்கான" ஆக்கக்

கூறாக அதனைக் கொள்ளலாம் என்பது முதன்மையான விடயமாகிறது.

"அம்மா வீட்டில் சும்மா இருக்கிறா" என்னும் பதிலின் பின்னால் உறைந்துகிடக்கும் அபத்தம், இருட்டடிப்பு, அதிகார நலனின் அரசியல் பற்றிப் பள்ளிச் சிறாரும் உணரத்தலைப்படும் வகையில் எமது செயற்பாடுகள் வலுவாக்கம் பெறும் போதே இப்பிரச்சினை பற்றிய சமூக உணர்திறனும் எய்தப்படும்.

"கட்புலனாகா வேலைகளைக் கண்களிற்படச் செய்வோம்"

- சந்திரசேகரன் -
சசீதரன் -



# தண்டனைகள் தவறுதலாக....

வகுப்பில் பாடத்தைத் தொடங்குமுன் சகல மாணவர்களும் வந்திருக்கிறார்களா? என்று வகுப்பறையைச் சுற்றி ஆசிரியை நளினி பார்வையைச் சுழல விட்டாள்..... கீர்த்தனா என்னும் மாணவியின் இடம் காலியாக இருந்தது.

முதன் முறையாக மூன்றாம் ஆண்டு வகுப்பாசிரியையாக கடமை யேற்றதிலிருந்து ஆசிரியை நளினி ஒவ்வொரு மாணவர்களையும் மிகுந்த அக்கறையுடன் கண்காணித்து வருவது குறிப்பிட்டுக் கூறக்கூடிய விடயமாக இருந்தது. அவ்வகுப்பில் மாணவி கீர்த்தனா ஒழுங்காக வருவதில்லை. வாரத்திற்கு எப்படியும் மூன்று நான்கு நாட்களே வருவாள் அதனால் அவளை நளினி தினமும் கண்டிப்பதுண்டு. “உனது அம்மாவை அல்லது அப்பாவை நாளைக்குக் கூட்டிற்று வா, அவர்க ளோடு நான் கதைக்கவேணும்” என்று கீர்த்தனாவிடம் முதல் நாள் கூறியிருந்தாள், ஆனால் இன்று அம் மாணவியும் வரவில்லை.... நினைக்கையில் சற்று ஆத்திரம் வந்தது நளினிக்கு.
“கீர்த்தனா இன்றைக்கும் வரவில்லையே... உங்கள்ள யாருக்காவது கீர்த்தனா பற்றி தெரியுமா?”

“தெரியாது ரீச்சர்...” சில குரல்கள் சேர்ந்தொலித்தது, அதனி டையில் பின்வரிசையில் இருந்து “எனக்குத் தெரியும் ரீச்சர்” என்று கூறிய மாணவியை நளினியின் கண்கள் நோக்கியது.

“எப்பிடித் தெரியும்....?” ஆசிரியை நளினி கேள்வியைமுடிக்கு முன்பே “எங்கட பக்கத்து வீடு ரீச்சர்.... பாவம் ரீச்சர் கீர்த்தனா இரவு கீர்த்தனாட அம்மா உடம்பெல்லாம் லாம்பெண்ணைய ஊத்திப் பத்திப் பொயித்தாவு....! பிறகு எல்லாருமாச் சேர்ந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் வைச்சி ருக்கிறாங்க.. அதுதான் ரீச்சர் கீர்த்தனா வரயில்ல...!”

இதனைக் கேட்டதும் கோபம் மறைந்து “ஐய்யோ பாவம்!” என்னும் அனுதாபம் பிறந்தது. மேலும் விபரம் அறியவிரும்பிய நளினி

"கீர்த்தனாட அம்மா ஏன் அப்பிடிச் செய்தவ...?" என்று வினவ... "எப்ப பார்த்தாலும் கீர்த்தனாட அப்பா அவள்ர அம்மாவோட சண்டை பிடிக்கிறவர்... ஒரே ஏசுவார்.. அடிப்பார் அவங்கட அம்மா எப்பவும் குளறிக் கொண்டுதானிருப்பாவு... கடைசில இரவு லாம் பெண்ணைய ஊத்திப் பத்திப்பொயித்தாவு பாவம் ரீச்சர்...! ஆக்களெல்லாம் கீர்த்தனாட அப்பாவுக்குத்தான் ஏசுறாங்க.... அவர்கூடாத ஆளாமெண்டு..!" என்று உண்மையான கவலை முகத்தில் தெரியக்கூறிமுடித்தாள்.

கீர்த்தனாவின் அம்மாவினது கவலையான கதை நளினியின் மனைதத் தொட்டு விட்டிருந்தது. நளினியை மிகவும் வேதனைக் குள்ளாக்கி இதயத்தை ரணமாக்கி அழியாதவடுவாக்கியிருந்த அந்தச் சம்பவத்தை.... கடந்தகால மறக்க முடியாத நினைவுகளை நினைவு படுத்தியது. தாயின் முகமும் இறுதியாக நடந்த தீச்சுவாலையும், சம்பவங் களுமே படமாக விரிந்தது. பாடசாலை இடைவேளையின் போது கண்களில் சோகம் வழிய அமர்ந்திருந்த நளினியைக் கண்டு அவளது சக ஆசிரியை அது பற்றி விசாரித்தாள்.

எனவே நளினியும் தன் சோகக் கதையைக் கூறத் தொடங்கினாள். "அப்போது எனக்குப் பதினாலு வயது, உலகமறியாப் பருவம் என்று சொல்வதற்குமில்லை, யாவும் தெரியுமென்பதற்குமில்லை இரண்டும் கெட்டான் பருவம் என்பார்களே அப்படி... உடன் பிறப்புகளும் இல்லை தனிப்பிறவி, என் தாய் தந்தையர்களும் மிகவும் அன்பாகவும் அன்னியோன்யமாகவும் அதுவரை என்னுடன் இருந்தார்கள். திடிரென அப்பாவிடம் சில மாற்றங்கள் ஏற்பட்டது. என்னையும் அம்மாவையும் வெறுக்க ஆரம்பித்தார். அதனால் சிறு சிறு பிரச்சனைகள் உண்டாகின. பேச்சு வாக்கில் ஆரம்பித்த பிரச்சினை அடிதடியென்று கைகலப்பில் முடிந்தது. அம்மா தினமும் அழுது வடிவதையும், சாப்பிடாமால் பட்டினி கிடப்பதையும் கண்டேன். தாயும் தந்தையும் நாயும் பூனையுமாக இருக்கும் போது பிள்ளையாகிய என்நிலை எப்படியிருக்கும் மிகவும் பரிதாபத்திற் குள்ளானேன். அவர்களிடமிருந்து ஏற்கனவே கிடைத்து வந்த அன்பு பாசம் எதுவும் கிடைக்கவில்லை...!

ஒரு நாள் ஒரு அன்ரி வந்து வெகு நேரமாக அம்மாவிடம் ஏதோவெல்லாம் பேசினார். இடைக்கிடை அப்பாவின் பெயர் அடிபட்டது. அந்த அன்ரி சென்ற பின் அம்மா அழுது கொண்டே இருந்தா. அப்போது

அப்பா வந்தார், அம்மா ஏதோவெல்லாம் கேட்டா, சத்தமாக அழுதா, அப்பாவுக்கு ஏசினா எனக்கோ புரிந்தது பாதி புரியாதது பாதி, இருவரின் நிலையையும் கண்டு விழித்தேன்.....! அப்பா அம்மாவைப்போட்டு அடிஅடியென்று அடித்து விட்டு ஆத்திரத்தோடு வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார்.

சிறிது நேரம் அழுது கொண்டிருந்து விட்டு அம்மாவும் வீட்டிலிருந்து ஆத்திரத்துடன் வெளியே சென்றாள், பயந்து போன நானும் நடப்பது ஏதும் புரியாது அழுது கொண்டு அம்மாவுக்குப் பின்னால் ஓடிச்சென்றேன். எங்கள் வீட்டிலிருந்து இரண்டு தெரு தாண்டி ஒரு வீட்டின் முன் போய் நின்று பலமாகக் கத்தினாள்.

அப்போது அம்மாவைவிட இரண்டு மூன்று வயது அதிகம் சொல்லத் தக்க ஒரு பெண் வெளியே வந்தாள். அவள்தான் பத்மாவதி யாக இருக்க வேண்டுமென நான் ஊகித்தபடி அம்மாவின் அருகிலே நின்றிருந்தேன். அந்தப் பெண்ணும் அம்மாவைக்கண்டு மிரண்டு நின்றாள். அம்மா நிறையத் திட்டினாள்.

“இஞ்சப்பாரு சும்மா வாய்க்கு வந்த படி கத்தாதே, நான் ஒருநாளும் உன்ர புருஷன தேடி உன்ர வீட்டுக்கு வரல்ல... உன்ர புருஷன்தான் என்னத்தேடி என்ர வீட்டுக்கே வந்திருக்கிறார். என்று அம்மாவைப் பார்த்து பதிலுக்குக் கத்தினாள் பத்மாவதி.

அப்போது உள்ளேயிருந்து வெளியே வந்த அப்பா “ஏன் இஞ்ச வந்தாய்?” என்று அம்மாவை நோக்கிக் கேட்டார். “அதத்தான் நான் உங்களுக்கிட்டக் கேக்கிறன்... இவள்ர வீட்டில உங்களுக்கென்ன வேலை....?” என்றாள் அம்மா. கேள்விக்குப் பதில் கூறமுடியாது திகைத்த அப்பா அம்மா மீது புலி போலச் சீறிப்பாய்ந்து அடித்தார். அம்மாவுக்குப் பின்னால் நின்றிருந்த நான் சத்தம் போட்டுக் கத்தினேன். அச்சத்தம் கேட்டு அயல் அண்டையில் உள்ளவர்களென ஒரு கூட்டமே கூடியது. என்ன நினைத்தாளோ தெரியாது அம்மா என்னைப் பிடித்துக் கொண்டு விறு விறென வீட்டிற்கு வந்தாள். உடனே “அம்மம்மா வீட்டிற்குப் போய் அம்மம்மாவையோ மாமாவையோ கூட்டிற்று வா!” என்று என்னை அனுப்பி வைத்தாள். ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று சிறிது நேரத்தின்

பின் அம்மம்மாவோடு நான் வரும்போது எங்கள் வீட்டில் நிறையச்சனம் நின்றது. அம்மம்மாவும் நானும் பதற்றத்துடன் ஓடிவந்தபோது உடல் முழுக்க தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த நிலையில் "அம்மா...அம்மா...அம்மா!" என்று அலறிக்கொண்டிருந்தாள். அம்மாவின் அருகே ஓடிச்சென்ற போது அருகே செல்லாது ஒருவர் என்னைப் பிடித்துக் கொண்டார்.

பின் என்ன நடந்ததென்றே எனக்குத் தெரியாது அன்று இரவு கண் விழித்துப்பார்த்து அம்மாவைத் தேடியபோது கதைக்க சிரிக்க என்னோடு வாழமுடியாத உயிரில்லாத அம்மாவாகத்தான் கண்டேன், பிறகு அம்மாட இறுதிச் சடங்குகள் எதிலயும் அம்மம்மாவும் மாமாமாரும் அப்பாவக் கலந்து கொள்ள விடயில்ல. அப்பா அந்தப் பத்மாவதியோட வீட்டிலேயே இருந்தார். அவ ஏற்கனவே கல்யாணமாகி கல்யாண வயதில் இரண்டு பெண் பிள்ளைகளும் இருந்தனர். அவவோட நடத்தையில சந்தேகப்பட்டு அவட புருஷன் அவவ விட்டிற்றுப் பிரிஞ்சி போயிற்றாராம் என்று ஆட்கள் கதைத்தார்கள்.

அம்மாட திதிய முடிச்சிற்று அம்மம்மாவும், நானும் அந்த ஊரை விட்டே போயிற்றம்.. அப்புறம் அங்கேயே படிச்சி ஆசிரியை தொழில் கிடைச்சி இந்த ஊருக்கே வந்து சேர்ந்தன். அப்பா அவவோடயே இருந்து பாரிசவாதம் வந்து செத்திற்றாராம். இங்க வந்த பிறகுதான் கேள்விப்பட்டம்! என்று அழுது கொண்டு தனது மறக்க முடியாத சோகக்கதையைக் கூறி முடித்தார் அதனைக் கேட்ட ஆசிரியை நளினிக்கு ஆறுதல் கூறினாள். அன்று பாடசாலை முடிந்ததும் கீர்த்தனாவின் தாயைப் பார்த்து வர வைத்தியசாலைக்கு சென்றாள். வைத்தியசாலைக்குள் நுழையும் போது வெளியே வராந்தாவில் நின்றிருந்த டாக்டரிடம் "என்ர பிள்ளையில ஒன்ற முதலில் பறிகுடுத்திற்றன்..! இப்ப இந்தப் பிள்ளைக் குஞ்சுக்குக்கும் ஏதாவதொண்டெண்டால் நான் எப்பிடி மனம் தாங்குவன்... கடவுள் போல மனம் வைச்சி என்ர புள்ளையக்காப்பாத்தித் தாங்கய்யா...!" என்று சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் கதறியழுது கொண்டிருந்தாள். அப்பெண்ணின் பின்னால் கீர்த்தனாவும் நின்று அழுது கொண்டிருந்தாள். எனவே அழும் பெண் கீர்த்தனாவின் அம்மம்மாவாக

இருக்கலாம் என நளினி அனுமானித்த வண்ணம் அவர்கள் பக்கம் நடந்து சென்றாள்.

நளினியைக் கண்டதும் கீர்த்தனா மேலும் அழுதாள், நளினிக்குப் பரிதாபமாக இருந்தது. அவளது முதுகைத் தலையைத் தடவிக் கொடுத்தாள். ஓரளவு சமாதானமான கீர்த்தனா சென்றதும் "இது எங்கட ரீச்சர்" என்று அவளின் அம்மம்மாவிடமும், "இது என்ர அம்மம்மா" என்று தனது அம்மம்மாவையும் அறிமுகப்படுத்தினாள். இப்போது அவளது அம்மம்மாவும் அழுகையை நிறுத்தியிருந்தாள்.

கீர்த்தனாவின் அம்மம்மாவின் முகத்தை நன்றாக அவதானித் தாள் நளினி, பழைய நினைவுகள் அவளது மனக் கண்முன் வந்தது. "ஓ...இவ...இவ... அந்தப்பத்மாவதி மாதிரி " மனம் அவளைக் கேட்க மீண்டும் உற்று நோக்கினாள், ஆச்சரியமாகவும், சந்தேகமாகவும் இருந்தது அவளுக்கு! "பத்து வருடங்களுக்கு முன் பார்த்தமுகம்... தாய்தந்தையரை நான் இழப்பதற்கு முன் பார்த்த முகம்...! தாய் தந்தையரை நான் இழப்பதற்கு காரணமாக இருந்த முகம் ஆமாம் சந்தேகமேயில்லை பத்மாவதியே தான்!" மனதிற்குள் பேசிக்கொண்டாள்.

அதிர்ச்சியாக இருந்தது நளினிக்கு... பத்து வருடகால இடை வெளியில் தலைமுடியும் நரைத்து மிகவும் மாறிப்போயிருந்தாள். நிறையச் சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்திருப்பாள் போலிருந்தது. ஆனாலும் அவளின் மகிழ்ச்சியான வாழ்வுக்கு குழிதோண்டிய பத்மாவதி யில்லையா? அவள் முகம் எளிதில் மறக்கக்கூடியதா? ஆழமான வடுவாக பதியப்பட்டிருந்தது... எத்தனை வருடங்கள் போனாலும் நரைதிரை உண்டாகியிருந்தாலும்... அடையாளம் காணும் விதத்தில் அந்தப் பத்மாவதியின் முகமும், சம்பவங்களும் பசுமரத்தாணி போல் பதியப்பட்டிருந்தது நளினியின் இதயத்தில்.

"உன்ர அம்மம்மாவின் பெயர் பத்மாவதிதானே?" கீர்த்தனாவிடம் நளினி கேட்ட கேள்விக்கு "ஆம்" என்பதற்குப் பதிலாக தலையை ஆட்டினாள் கீர்த்தனா.

உலக சுழற்சியை நினைத்து ஆச்சரியமுற்றாள் நளினி,

"அம்மாவைப் பார்ப்போம்" என்று கூறக் கீர்த்தனா முன் செல்ல வார்ட்டினுள் நுழைந்தாள் நளினி, பத்மாவதியும் பின்னே சென்று தீக்கிரையாகி வெள்ளை நிற மெல்லிய துணியால் உடல் முழுவதுமாகப் போர்த்தப்பட்டிருந்த அந்த அப்பாவி மகளைக் காட்டி அழுது நின்றாள்.

தீய்க்கிரையாகி தன்னைத்தானே சுட்டுக் கொண்ட தன்னிலையை எண்ணிக் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தது அந்தப் பெண் ஜென்மம். பத்மாவதியைக் கண்டதில் ஏற்பட்டிருந்த கோபம், வெறுப்பு எல்லாம் அவளது மகளின் நிலையைக் கண்டு சற்றுக்கரைந்து போனமாதிரியானது நளினிக்கு...!

"இப்படியான முடிவுக்கு வருவதற்கு என்ன காரணம்?" பத்மாவதியை நோக்கிக் கேட்டாள் நளினி.

தனது மகளின் கணவன் சில காலமாக வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தானாம் அதனை அறிந்த தன் மகள் மனம் பொறுக்காது இப்படிச் செய்து விட்டாளம் என்று கூறியழுதாள் பத்மாவதி.

நளினி பத்மாவதியை அடையாளம் கண்டு கொண்டாளே தவிர பத்மாவதி நளினியை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அதற்குச் சாத்தியமுமில்லை. காரணம் நளினியின் அம்மா இறந்து முடிந்த கையோடு அந்த ஊரை விட்டுச்சென்று பத்து வருட இடைவெளியின் பின் அவ்வூர் பாடசாலையில் ஆசிரியையாக வந்திருக்கிறாள். ஆகவே அவளது பேத்தி கீர்த்தனாவின் ஆசிரியை என்று மட்டுமே அறிமுகம்.

நளினிக்கும் ஒரு கேள்வி எழுந்தது கேட்போமா? வேண்டாமா? இறுதியில் கேட்டுத்தான் பார்ப்போமே என்று மனம் சொல்ல பத்மாவதியை நோக்கி....

"நான் யாரென்று தெரியுமா?" கேட்டாள்

"தெரியேல்லையேம்மா...!" கண்புருவங்களை சுருக்கிக் கொண்டு கூறினார்.

ஊர், பெயர் உறவுமுறை, நடந்த சம்பவங்கள் என்றுயாவற்றையும் விபரமாக விளக்கினாள் நளினி. அதனைக் கேட்ட பத்மாவதி அதிர்ச்சிய

டைந்து ஏற்கனவே அழுது அழுது வீங்கிக்கறுத்துப் போயிருந்தமுகம் மேலும் வாடிக்கறுத்துச்சுருங்கிப் போனது,

"என்ன மன்னிச்சிடம்மா..! யார் யாருக்கு செய்த துரோகமோ என்னையும் என்ர பிள்ளைகளையும் போட்டுப் படாத பாடு படுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பாவிய மன்னிச்சிடம்மா... பத்மாவதி அழுதுகொண்டிருந்தாள்.

மாலையில் வீடுவந்து சேர்ந்து நளினி அன்று நடந்தது சகலதையும் தன் அம்மம்மாவிடம் ஒப்புவித்தாள். தன் இறந்து போனமகளை நினைத்துச் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் சொரிந்தாள் அம்மம்மா.

உன்ர அப்பா கொஞ்சக்காலம் என்ர பிள்ளையப் போட்டுக் கொஞ்சப்பாடா படுத்தினவர். அதுக்குத்தான் நாலைஞ்சு வருஷமாய்க் காலயும் கையையும் பக்கவாதம் வந்து இழுத்துக் கொண்டு கிடந்து அழுந்திச் செத்துப்போனாரே... அவரவர் செய்யிறதுக்கு அவரவர் அனுபவிச்சித்தானாகணும்..!"
அழுது தீர்த்த அம்மம்மா அப்படியே தூங்கிப்போனாள்.

என்ன தான் அம்மம்மாவைச் சமாதானம் பண்ணினாலும் நளினிக் கென்னவோ தூக்கம் வரவில்லை. கடந்த கால நிகழ்வுகளும், காலையில் இருந்து நிகழ்ந்த சம்பவங்களும், சந்தித்தவர்களும், மாறிமாறி மனதில் வலம் வந்த வண்ணமிருந்தது.

புத்தி பேதலித்து தவறிழைத்து அதற்காக நிறையவே அனுபவித்து இறந்து போன தந்தையும், இதுவரையில் உயிரோடிருந்து வருந்தி அல்லலுறும் பத்மாவதியும், கணவனால் துரோகமிழைக்கப்பட்டு மனமுடைந்து தன்னுயிரையே மாய்ந்துக் கொண்ட அம்மாவும், இப்போதும் தன் மகளை நினைத்து அழும் அம்மம்மாவும், கீர்த்தனாவின் அம்மாவும், அப்பாவும், இவர்களில் யார் பெரியவர்கள்? யார் தண்டனை பெற்றவர்கள் யார்? பெறுபவர்கள் யார்? பரிதாபத்துக்குரியவர்கள் யார்? என்று நளினியின் மனம் கணக்குப் போட்டுப்பார்த்தது.

நளினியின் அப்போதைய சிந்தனைப்படி அவளது அம்மாவும், கீர்த்தனாவின் அம்மாவும் எடுத்த முடிவு தவறானதாகவே பட்டது. ஆமாம் தவறு செய்தவர்கள்... நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் அப்பாமார்கள்... அப்படியிருக்க இந்த அம்மாமார்கள் தீவைத்து.. எரிந்தும், நஞ்சருந்தியும், தூக்குப்போட்டும் கிணற்றில், குளத்தில் விழுந்தும் இப்படித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டு இறந்து போகிறார்கள். இவர்கள் ஏன் சிந்திக்க மறுக்கிறார்கள்? சமுதாயத்தில் அதிகமான பெண்கள் இப்படியான முடிவைத்தானே நாடுகிறார்கள். தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தவறு செய்த கணவர்மார்கள் தானே... அவர்களைத் தண்டிக்க முடியவில்லையாயின் தனியே பிரிந்து செல்ல வேண்டியதுதானே ஏன் முட்டாள் தனமானதும், கோழைத்தனமானதுமான தற்கொலை முடிவுக்குப் போக வேண்டும். அது எந்த வகையில் லாபம்? என்ன நியாயம்? தவறிழைப்பது ஆண், தண்டனை பெண்ணுக்கா? தவறு செய்தவர்களையும் அதற்கு உடந்தையானவர்களையும் தான் தீயிட்டுக் கொழுத்த வேண்டும். நம்மை நாமே கொழுத்திக் கொள்ளக் கூடாது.

நளினி கீர்த்தனாவை தன் இடத்தில் வைத்துப்பார்த்தாள். தந்தை துரோகம் செய்ய.. தாய் தண்டனை பெற.... பிள்ளைகளின் நிலையோ அம்மாமார்களின் தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டேயிருந்தது.



**- லோகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி -**

# கை நழுவும் சமாதானம்

இலங்கையினுள் போர்ச்சூழல் மீண்டும் எழுச்சி கண்டுள்ளதன் காரணமாக கடந்த சில மாதங்களினுள் வடக்கு கிழக்கில் மக்கள் இடம்பெயர்வு, குண்டு வெடிப்புக்கள், காணாமல் போதல், பல்வேறு இடங்களிலிருந்து மீட்கப்பட்ட அடையாளம் காணப்படாத சடலங்க ளின் எண்ணிக்கை மற்றும் மக்களின் பாதுகாப்பற்ற நிலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறான தொடர் செயற்பாடுகள் காரணமாக போர் நிறுத்தம் முறிவடைந்துள்ளது. அது இந்த நாட்டை நிஜ யுத்தத்திற்குள் தள்ளிவிட்டிருக்கிறது. அச்சம் மற்றும் வன்முறையின் அறிகுறிகள் நாடெங்கிலும் பரவி ஒருவரையொருவர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம்.

இந்த போர்ச் சூழலுக்கு மத்தியில் வெறுமனே "ச-மா-தா-ன-ம்" என்ற ஐந்தெழுத்தில் மட்டும் நின்றுகொண்ட பல கடும்போக்காளர்கள் சமாதானத்திற்கு எதிராக, சமாதானத்திற்காக குரல் கொடுப்பவர் களை தூற்றுகின்றனர். ஆவேசம் கொண்டு ஏனையவர்களையும் ஆவேசம் கொள்ள வைக்கின்றனர். சமாதான வேலைத்திட்டங்களை குழப்புகின்றனர். யுத்தத்தின் விளைவுகளை கண்ணால் கண்ட, யுத்தத்தால் நேரடியாக பாதிக்கப்பட்ட இலங்கை மக்கள் அவர்களது வாழ்நாள் பூராகவும் சம்பாதித்த அனைத்து செல்வங்களையும் யுத்தம் அழித்துள்ளது. ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்தது மட்டுமன்றி பெருமளவில் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. மக்களின் மனங்கள் சிதைந்தன.

பொதுவாக எமது நாட்டவர்கள் சமாதான விரும்பிகளாக அல்லது அதற்கு எதிரானவர்களாக செயற்படுவதை தற்போது தெளிவாக உணர முடிந்துள்ளது. கடந்த காலங்களில் நடைபெற்ற சமாதான வேலைத் திட்டங்களுக்கு மக்கள் வழங்கிய சாதகமான பிரதிபலிப்புக் களையும், சமாதான விரும்பிகளுக்கு விடுக்கப்பட்ட சவால்களையும்

இதற்கு நல்லதோர் உதாரணமாக கொள்ளலாம். இவற்றுக்கு மத்தியில் இன்னும் ஒருசிலர் இந்நாட்டில் நடைபெறுவது யுத்தமாகவோ அல்லது வேறு என்னவாக இருந்தாலும் அது எந்தவகையிலும் தமக்குரியதல்லவென கருதி மௌனம் சாதிக்கின்றனர். அது தவறல்ல. எனினும் மனிதநேயத்தைப் போற்றும், மனித உரிமைகளை மதிக்கும், மனித உயிர்களின் வெகுமதியை அடையாளம் காணும் மானிடர்கள் என்ற வகையில் எமக்கு யுத்தம் மற்றும் அதனுடைய எதிர் விளைவுபற்றி எதுவித சிந்தனையும் இன்றி வாழ முடியாது. அது பிரபஞ்சத்தின் மனித விழுமியங்களை அவமதிப்பதாகும்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சமாதானப் பேரணியின் இடைநடுவில் அத்துமீறி நுளைந்த போர்வெறி கொண்ட கும்பல் சமாதான வேலைத்திட்டத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபட்டது. பின்னர் அது சமாதானத்திற்காகவும் யுத்தத்திற்காகவும் உருவாக்கப்பட்ட சிறியதொரு யுத்தமாக மாறியது. சமாதானத்திற்காக எவ்வளவு பாடுபட்டாலும், சமாதானத்திற்காக செயலாற்றும் நபர்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எதிராக கடும் போக்காளர்கள் அணிதிரண்டார்கள். இன்றும் இந்நிலைமையில் மாற்றமில்லை.

இந்நாட்களில் எந்தவொரு அமைப்பும் ஏற்பாடு செய்யாத எனினும் தன்னிச்சையாக முன்வந்த பலதரப்பட்ட நபர்கள் குழுவொன்று வாரத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாலை 4.30 மணிக்கு சமாதானசுலோகங்களுடன் கொழும்பு லப்ரன் சுற்றுவட்டத்தில் ஒன்று கூட ஆரம்பித்தது.

இவ்வாறு சமாதான சுலோகங்களைக் காட்சிப்படுத்துவதன் நோக்கம் யுத்தத்தை நிறுத்தி உடனடியாக சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு அரசுக்கும் எல்.ரி.ரி.ஈ. யினருக்கும் வேண்டுகோள் விடுத்து மக்களை அறிவூட்டுவதாகும். வாராந்தம் மாலை 4.30 மணியிலிருந்து 6.00 மணிவரை நடைபெறும் இந்த அடையாள சமாதான ஒன்றுகூடலில் மக்களின் பிரதிபலிப்பு நாளுக்குநாள் வித்தியாச

மானது. ஒரு கோணத்தில் மிகுந்த அனுகூலமானதாகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும் இருக்கும் அதேவேளை மறுகோணத்தில் பலமற்றதாகவும் ஆதரவற்றதாகவும் இருக்கிறது. சுலோகங்களில் எழுதப்பட்டுள்ளவைகளை வாசிக்கும் சமாதான ஆர்வலர்கள் இது, "நல்லதொரு காரியம்" "இந்த நாட்டில் யுத்தத்துடன் எம்மால் வாழ முடியாது" "மிக்க நல்லது" எனக் கூறும் வார்த்தைகளை அவ்வப்போது எம்மால் கேட்க முடிகிறது.

மறுபுறத்தில் எம்மால் மிக இலகுவாக அடையாளம் காணக்கூடிய கடும்போக்காளர்கள் "அவற்றைச் சுறுட்டிக்கொண்டு போங்கள், அவை இங்கு காண்பிக்கப்பட கூடியவை அல்ல". "இவ்வாறு நிற்பதற்கு உமக்கு எவ்வளவு பணம் கொண்டுவரப்படுகிறது". "உமது கூலி எவ்வளவு" எனக்கூறி சமாதானத்தை குழப்பும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இந்நிகழ்வில் இடைநடுவில் வரும் கடும்போக்காளர்கள் எம்மை துரத்திய வண்ணம் உள்ளனர்.

ஒரு நாள், இந் நிகழ்வின் பின் தேநீர் அருந்தச் சென்ற ஐந்து செயற்பாட்டாளர்களை "சமாதானம் பற்றி பேசும் நீங்கள் புலிகள்....." எனக் கூறிக்கொண்டு வந்த இரண்டுபேர் அவர்களை தூற்றத் தொடங்கினர். அத்துடன் நிறுத்தாமல் அவர்கள் ஒருவரிடம் இருந்த விலைமதிக்கத்தக்க புகைப்படக் கருவியொன்றையும் பறித்துக் கொண்டார்கள். இது பற்றி உடன் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. அரை மணித்தியாலத்தின் பின்பே அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இரு சாராரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளதோடு கூடுதலான விசாரணைகளை ஐந்து செயற்பாட்டாளர்களிடமே நடத்தியுள்ளனர். சமாதானத்திற்காக சுய விருப்பத்துடன் பாடுபடும் செயற்பாட்டாளர் களின் கதி அது.

இவ்வாறான சம்பவங்களிலிருந்து நாங்கள் படிப்பினைகளைக் கற்று, அஞ்சி, மௌனமாக வீட்டு மூலையில் இருந்து விடுவோம் என இவர்கள் நினைத்தாலும், இச்சமாதான செயற்பாடு ஒவ்வொரு

மாதமும் முதல் புதனன்று நடைபெற்ற வண்ணமுள்ளது. இந்நாட்டில் சமாதானத்திற்கு எதிராக நின்று யுத்தத்திற்காக எவ்வளவுதான் தலைசாய்த்தாலும் அரசியல் தீர்வொன்றின் மூலமே நிலையான சமாதானத்தை அடைய முடியுமென்பதை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியுள்ளது. அதுமாத்திரமன்றி இவை மேலும் யுத்தம் எனப்படுகின்ற அரக்கனின் கைகளில் இந்நாட்டின் கடைசி பங்கையும் பலிகொடுக்க தயார் நிலையில் இருக்கின்ற அரசியல் வாதிகள், கடும்போக்காளர்கள், கிளர்ச்சியாளர்கள் இந்த யுத்தத்தை காலங்காலமாக இழுத்துச்சென்று இனப்பிரச்சனைக்கு அதன் மூலம் தீர்வுகாண நினைப்பது முட்டாள்தனமானது. இவ்வுலகத்தில் அனைத்து சமயங்களும் வைராக்கியத்தை வைராக்கியத்தால் வெல்ல முடியாதெனவும் சமாதானம் இல்லாமல் தரணி நிலைத்து நிற்காதெனவும் போதித்துள்ளன.


இத்தருணத்தில் எமக்கு சமாதானம் தற்காலத்தில் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றதென்றால் அதாவது இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கு மட்டுமல்லாது இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் தேவைகள், எண்ணங்கள், கருத்துக்கள், கலாசாரம், பாரம்பரியம் மற்றும் உரிமைகள் என்பவற்றை சரிநிகராக மதிப்பளிப்பதற்குமாகும். அதனை உணர்ந்து நாம் உண்மையான மனித குலத்திற்குரியவர்கள் என்பதை உத்தரவாதப்படுத்துவதை கைங்கரியமாகக் கொள்ள வேண்டும். அதற்காக நாம் இந்நாட்டின் பெரும்பாலான சமாதானவாதிகளாக மாற வேண்டும். “இந்நாட்டிற்கு சமாதானம் தேவை” என்பதை மனதில் மாத்திரம் நினைக்காமல் யுத்தத்திற்கு எதிராக இன மத பேதங்களை மறந்து சமாதானத் திற்காக அனைவரும் முன்வந்து வெளிப்படையாக உழைக்க வேண்டும். அதற்குத் தேவையான அர்ப்பணிப்பையும் ஆர்வத்தையும் செலுத்த வேண்டும். சமாதானத்திற்காக ஒரே குரலை ஓங்கச் செய்ய வேண்டும். இனவாதிகள், போர்வெறி கொண்டவர்களுக்கு எதிராக சமாதானத்தின் பலத்தை காண்பிக்கும் ஒரே வழியும் அதுவே.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் பின் எந்தவொரு இனப்பிரிவினையுமின்றி ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டதை இவ்விடத்தில் நினைவுகூற விரும்புகிறேன். அன்று நாங்கள் வடக்கு தெற்கு கிழக்கு பற்றிய வேறுபாடின்றி அனைவருக்கும் இன மத பேதமின்றி உதவினோம். அப்பேரழிவை ஒன்றாக எதிர்கொண்ட நாம் திடீரெனத் தோன்றிய யுத்தம் காரணமாக ஒற்றுமையை பிளவுபடுத்தும் சவாலுக்கு இன்று முகம் கொடுத்துள்ளோம்.

இந்நாட்டில் நிலவும் கொடிய யுத்தத்தை நிறுத்தி மனித உரிமைகளை மதிக்கின்ற, அமைதியானதும், சுதந்திரமானதும் சனநாயகமானதுமான நாடாக இலங்கை மாற வேண்டும் என்பது செப்ரம்பர் 21ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச சமாதான தினத்தின் ஒரே வேண்டுதலாகவும் காணப்பட்டது. ஒரு சில நாளிதழ்கள் மற்றும் வெகுஜன ஊடகங்கள் எமக்கு யுத்தம் பற்றிய பல்வேறு செய்திகளை வழங்குகின்றன. கட்டுக்கதைகள் வாயிலாகவும் செய்திகள் வருகின்றன. எனினும் மனித நேயம், மனித கௌரவம் மற்றும் உண்மையான சுதந்திரத்தை எப்பொழுதும் விரும்பும் நாம் மனிதர்களாக, இப்படியான தகவல்களை பிரசாரம் செய்யும்போது நாம் "செய்திகளை யுத்தத்தை பரப்பவும் மனித உயிர்களை காவுகொள்ளும் ஒரு "விசமாகக்" கொள்ளாது, சமாதானத்திற்காக மட்டும் அதிஉயர் காத்திரத்தை வழங்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் யுத்தம் செய்வது வைராக்கியம் கொள்வது எங்களுடைய சகோதர சகோதரிகளுக்கு எதிராகவே இது கடந்தகால கவலைக்குரிய சம்பவங்கள் ஊடாக நாம் கற்ற பாடங்கள் ஆகும். அம்மாதிரியான நிகழ்வுகள் மீண்டும் நடந்தேறா திருக்க, சமாதானம் மலர வேண்டும் என அனைவரும் இதய சுத்தியுடன் பிரார்த்திப்போம். செயல்படுவோம். அதற்கான காலம் எமது கைகளில் உள்ளது.

ஜெயசித்திரா

# வித்தியாசம்



உன்னது உட்காயம் என்றாலும்
பகிரப்படக்கூடியது! ஆனால்.... நான்?
எல்லாமே போலி என்று தெரிந்த பின்னும்
போலியான புன்னகையுடன் எனது நடமாட்டம்.....

கொட்டினாய் என்னிடம் – உன்
உள்ளத்து ரணங்களை...
எனது மகிழ்ச்சிகளைக் கூட உன்னிடம்
பகிர்ந்து கொள்ளப் பயந்தபடி நான்....

ஒவ்வொரு தடவையும்...
ஒவ்வொரு உறவும்....
ஒவ்வொரு நட்பும்... – உள்ளே
கிடப்பதைக் கொட்டிக் கொள்ளும் போது
நான் மட்டும் என்னுள்ளே மூழ்கிப் போகிறேன்.

உனக்குத் தெரிந்த தெல்லாம்
உன்னுடைய இழப்புக்கள்...!
சிரித்த முகத்துடன் உன்னுடன் உரையாடும் – என்
மனத்தின் கனதியை எப்போதேனும் – நீ
புரிந்துகொள்ளத் துணிந்ததுண்டா?

சேலை சுற்றிய என் உடல் தாண்டி...
கனவுகள் நிறைந்த,
கவலைகள் கனத்த, என் இதயத்தை
எப்போதேனும் நீ கண்டதுண்டா?

உனக்கு வேண்டிய தெல்லாம்
வாழப்பணமும்...
அழகிய துணையும்..
கவலைகள் அற்ற இயந்திர வாழ்வும்!

உன்னது எல்லாம் என்னிடம்
பகிரப்படக்கூடியவை
என்னது எல்லாம் – என்னுள்ளே அடக்கம்!
பகிர்ந்து கொள்ளவும் பதட்டப்படவும்
நான் ஒன்றும் நீயாக அல்லவே!

எஸ். சுதாகினி
கிழக்குப்பல்கலைக்கழகம்

# சிரிக்கவல்ல... சிந்திக்க....

அலுவலகக் கடமையில் மும்முரமாக ஈடுபட்டாலும் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் வினோதமான மின்னஞ்சல்களைப் பார்ப்ப துண்டு. மிகவும் கருத்தாளமிக்க தகவல்களைக் கொண்ட பெண் சஞ்சிகையூடாக உங்கள் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் இம் மின்னஞ்சல்களை வாசித்து இந்தக் கட்டுரையை எழுத முனைகிறேன்.

– மங்களா சங்கர் –

**கா**லம் மாறுகின்றது..... மனிதத் தேவைகள் மாறுகின்றன... .....உதாரணமாக நவீன தொழினுட்பத்தை எடுத்துக் கொள்வோம் ஆரம்பத்தில் புறாவினூடாகச் செய்திகள் பரிமாறப்பட்டன. பின்னர் அஞ்சலோட்டக்காரர்கள்.....அதன் பின்னர் தபால்காரர்கள் ஊடாக கடிதங்கள் வினியோகிக்கப்படுகின்றன. இன்று விஞ்ஞானம் தொழினுட்பம் என்பன முன்னேற்றமடைந்துள்ளது. நவீன தொழினுட்ப உலகில் மின்வேகத்தில் செய்திகளைப் பரிமாறு கின்றோம் குறித்த செய்தியை ஒரே நேரத்தில் இலட்சக் கணக் கானோர் பெறுகின்றோம். ஆயினும் பெண்கள் பற்றிய கருத்தியலில் முன்னேற்றம் அல்லது மாற்றம் உள்ளதா?

காலங் காலமாக பெண்களை இரண்டாம் பட்ச நிலைக்கு இட்டுச் செல்ல பலமொழிகள் காரணமாகின. ஆனால் இன்றும் அப்பழமொழிகளுக்கு புத்துயிர் ஊட்டி மேலும் மேலும் பெண்களை இரண்டாம் பட்ச நிலைக்கும், இழிவு நிலைக்கும் இட்டுச் செல்ல இன்றைய நவீன தொழிநுட்ப முன்னேற்றங்கள் அசுர வேகத்தில் எவ்வாறு இயங்குகின்றன என்பதை இக்கட்டுரை விளக்குகின்றது. நவீன தொழினுட்பத்தின் உபயமான மின்னஞ்சல் மூலம் பெறப்பட்ட தகவல்கள் இவை......... தங்களைச் சிரிக்கவைப்பதற்காக அல்ல ஆழமாக சிந்திக்க வைப்பதற்காகவே.

தங்கள் நினைவுகளை சற்று 10 - 15 வருடங்கள் பின்னோக்கிப் பாருங்கள் அனாமதேயக் கடிதங்கள் வருவதுண்டு அதுவும் "இம் மடலை அலட்சியம் செய்யாதீர்கள் கதிர்காமக்கந்தன் அருள் புரிவார். இச் செய்தியைப் பிரதி பண்ணி இன்னும் பத்து பேருக்கு அனுப்புங்கள் இல்லையெனில் பேராபத்துக் காத்திருக்கின்றது....." என்பது போன்ற கடிதங்கள் வருவதுண்டு. இதனைப் பெறுபவரும் பயத்தில் இன்னும் பத்துப் பேரை துன்பத்தில் ஆழ்த்துவார்.

இன்றைய கால மின்னஞ்சல்கள் மட்டும் என்னவாம் "இச் செய்தியை என்னையும் உங்களையும் தவிர ஏழு பேருக்கு மின்னஞ்சல் செய்யுங்கள் உங்களுக்காக ஒரு புதுமை காத்திருக்கின்றது. இதனை அலட்சியம் செய்யாதீர்கள் கடவுள் உங்களை ஆசீர்வதிப் பார் என்றிருக்கும். இன்னும் சில நீங்கள் 2 பேருக்கு அனுப்பினால் பணவரவு, 5 பேருக்கு அனுப்பினால் பதவியுயர்வு என காதில் பூ சுற்றும். ஆயினும் எமது படித்த...... நண்பர்களும் அதனை விட்டபாடில்லை. மின்னஞ்சல் பட்டியலில் 5 பேரோ 7 பேரோ என குறிப்பிட்டபடி அனுப்பியிருப்பார்கள்.

காலங்காலமாக பெண்கள் பற்றிய பொய்யான பிம்பங்களைப் பரப்புவதில் கருத்தியல் ரீதியில் மொழி, இலக்கியம், ஊடகம், தொடர்பு சாதனங்கள் என்பன முக்கிய பங்குவகிக்கின்றன. இவற்றில் இன்றைய மின்னஞ்சல் பாவனைமூலமாக கிடைக்கும் வாய்ப்பைக் கொண்டு நகைப்புணர்வுடன் கூடியவாறு பெண்கள் அடங்காப்பிடா ரிகளாகவும், மோசமானவர்களாகவும் காட்டப்படுகின்றனர். கிடைக் கும் செய்தியானது இவை ஒருவகையில் வாசிப்பவரைச் சிரிப்பிலாழ்த்தினாலும் மறுபுறம் பெண்கள் பற்றிய பிழையான கருத்துக்களை இளம் சமூகத்தினரிடையே கொண்டு செல்வதில் இம் மின்னஞ்சல்கள் பெரும் பங்காற்றுகின்றதென்றே கூறவேண்டும். இவ்வாறான மின்னஞ்சல் செய்திகள் பின்வருமாறு....,

■ ஆண்களும் பெண்களும் ஒருநாள் இறந்து கடவுளிடம் வந்தார்கள். கடவுள், "மனைவியால் அடக்கி வைக்கப்பட்டிருந்த ஆண்கள் ஒரு


வரிசையிலும் மனைவியை அடக்கி வைத்திருந்த ஆண்கள் இன்னொரு வரிசையிலும் நில்லுங்கள், பெண்கள் வெளியே செல்லுங்கள். ஆண்களும் பெண்களும் ஒருவரோடொருவர் பேச முடியாது" என உத்தர விட்டார். சிறிது நேரத்தில் கடவுள் திரும்பி வந்த போது பெண்கள் யாருமில்லை. இரண்டு வரிசையாக ஆண்கள் நின்றார்கள். மனைவியால் அடக்கிவைக்கப் பட்டிருந்த ஆண்களின் நிரை நூறு மைல் தூரம் வரை நீண்டது. ஆனால் மனைவியை அடக்கி வைத்திருந்த ஆண் ஒருவர் மட்டுமே நின்றார். கடவுளுக்கு பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. "மானிடர்களே நீங்கள் வெட்கப்படவில்லையா? என்னைப் போன்ற உருவில் உங்களைப் படைத்தேன் ஆனால் உங்கள் வாழ்க்கைத் துணைவியால் நீங்கள் அடக்கி வைக்கப்பட்டுள்ளீர்கள். அதோ என்னுடைய ஒரே மகனைப் பாருங்கள் என்னைப் பெருமைப்பட வைத்துள்ளான். அவனிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள்! சொல் மகனே நீர் மட்டும் இந்த வரிசைக்கு எவ்வாறு வந்தாயெனப் புரியப்படுத்து" என்றார்.

அந்தத் தனிமனிதனும் "எனக்கொன்றும் தெரியாது எனது மனைவிதான் இங்கு நிற்கும்படி சைகை செய்தாள்" என்றான்.

தனக்கு வரப்போகும் பெண் எவ்வாறிருக்க வேண்டும்?. இராமாயணகாலமாக இருக்கட்டும், நளவெண்பா காலமாக இருக்கட்டும் மன்னர்களின் எதிர்பார்ப்பிலிருந்து சாதாரன குடிமகனது எதிர்பார்ப்பில் ஏதாவது மாற்றம் உள்ளதா? என்று பார்த்தால் மெல்லிடையாள், கொடியிடையாள், என்றும்

"நாற்குணமும் நாற்படையாய்
ஐம்புலனும் நல்லமைச்சாய்
வார்க்கும் சிலம்பே யணிமுரசாய்
ஆழுமே பெண்மையரசு....."


இது நளவெண்பா. மெல்லிடையாள்? தமயந்தியைப் பற்றிய வர்ணனை. இன்று மின்னஞ்சலில் தனக்குத் தேவையான கச்சிதமான பெண்ணைத் தேடுபவரின் கற்பனையிது.



ஒருமனிதன் காத்திருக்கிறான்.. தான் எதிர்பார்க்கும் பத்துவிதமான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பெண்ணுக்காக .

- தன்னுடைய தாயைப் போல சமைக்கக் கூடியவள்...
- வீட்டை சுத்தமாக வைத்திருக்கக் கூடியவள்...
- ஊர்வம்பு பேசாதவள்...
- பணத்தை செலவளிக்கத் தெரியாதவள்
- நாள் முழுக்க வேலைசெய்யக் கூடியவள்
- இரவு முழுவதும் தன்னுடன் நடனமாடக் கூடியவள்..
- தன்னை மட்டுமே நேசிக்கக் கூடியவள்..

அவன் இன்னும் காத்துக் கொண்டிருக்கிறான்.



சிலமின்னஞ்சல்கள் பெண்களைப் பேராசை பிடித்தவர்களாகவும் ஒன்றினாலுமே திருப்திப்படுத்த முடியாதவர்களாகவும் காட்ட முனைகின்றன.

"பெண்ணை சந்தோசப்படுத்த ஆண் இதை மட்டுமே செய்ய வேண்டும். ஒரு நண்பனாக, ஒரு துணைவனாக, ஒரு காதலனாக, ஒரு சகோதரனாக, தந்தையாக, ஒரு சமையல்காரனாக, ஒரு மின்சார இணைப்பாளராக, ஒரு தச்சனாக, ஒரு நவநாகரீகமுள்ளவனாக, உளவியலாளராக, மனோதத்துவ நிபுணராக, குணப்படுத்துபவராக, நன்கு செவிமடுப்பவராக, ஒரு நிர்வாகியாக, நல்ல தந்தையாக, மிகவும் சுத்தமானவராக, வீரராக, புரிந்துகொள்ளக் கூடியவராக (பட்டியல் நீள்கிறது) மறக்காமல் அடிக்கடி அன்பளிப்புகளை வழங்குபவராக, பணக்காரராக, துணிமணிகளை வாங்குபவராக, மற்றைய பெண்களை ஏறெடுத்தும் பார்க்காதவராக இருக்க வேண்டும். அதேபோல் அவள்மீது மிகவும் அக்கறையாக இருக்க வேண்டும். ஆனால் அவளிடமிருந்து எதையுமே எதிர்பார்க்கக் கூடாது. அவளுக்கு போதிய சுதந்திரம் கொடுக்க வேண்டும் ஒருபோதும் அவள் எங்கே போகிறாளென கவலைப்படக்கூடாது. ஒருபோதும் மறக்கக்கூடாதது பிறந்தநாள், திருமண நினைவுநாள், என்பவற்றை மறக்கக் கூடாது" எனத் தொடர்கிறது....

ஆணை எவ்வாறு சந்தோசப்படுத்தலாம். "அவனை தனிமையில் விடுங்கள்"

இது, பெண்ணை சந்தோசப்படுத்த பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளதாகவும் ஆண்களை மகிழ்ச்சிப்படுத்துவது எது என்பதையும், பெண்கள் ஆண்களை நெருக்கடிக்கு உட்படுத்துபவர் களாகவும் சித்தரிக்கின்றது.

பெண்களை ரகசியம் பேணாதவர்களாகவும், வதந்தி பரப்புபவர்களாகவும், பேச்சில் கட்டுப்பாட்டியல்பு அற்றவர்களாகவும் சித்தரிக்கும் மின்னஞ்சல்கள்:

Telephone – தொலைபேசி

Telex – தொலைநகல்

Teligrame – தொலை தந்தி

Tell a women பெண்ணிடம் சொல்

இங்கு பெண்ணை ஒரு செய்தி பரிமாற்று ஊடகம் போன்று காட்டுகின்றனர்.

ஆணிடம் எதையாவது சொன்னால் இந்தக் காதால் வாங்கி மற்ற காதால் விட்டு விடுவார்கள்.

பெண்ணிடம் ஒரு செய்தியை சொன்னால் இரண்டு காதுகளாலும் வாங்கி வாயால் வெளிவிடுவார்கள்.

ஒரு ஆசிரியருக்கும் மாணவனுக்குமான கலந்துரையாடலிது. ஆசிரியர்:

சாம் நீ அதிகம் பேசுகிறாய்.

சாம் : இது எனது குடும்பப் பழக்கம்.

ஆசிரியர் : என்ன?

சாம் : ஐயா, எனது பாட்டன் ஒரு நடைபாதை வியாபாரி, எனது தந்தை ஒரு விற்பனைப் பிரதிநிதி.

ஆசிரியர் : உனது தாய்

சாம் : அவளொரு பெண்...



ஐந்து வருடங்களாக இடம் பெற்ற சூடான விவாதத்திற்குப் பின்னர் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2006 மார்ச் மாதத்தில் அங்கீகரித்துள்ள திருமணத்திற்கான புதிய சின்னம்.

இது இறுதிக்கட்டத்திலிருக்கும் ஒரு ஆணினுடைய கதை. அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறக்கும் தறுவாயிலுள்ளார். ஆனால் வருபவர் செல்பவர்களிடமெல்லாம் தான், AIDS நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்கிறார். அவரது மகன் ஏன் அப்படி சொல்கிறீர்கள் என்று கேட்க அப்படி சொன்னால் தான் நான் இறந்தபிறகு உனது அம்மாவை யாரும் அணுக மாட்டார்கள்" என்றார். இறந்த பின் கூட தன்னுடைய மனைவி மேல் ஆண்கள் செலுத்தும் ஆதிக்கக் கட்டுப்பாட்டை இது காட்டவில்லையா?

பெண்களைப் பற்றிய தத்துவங்களும், பொன்மொழிகளும் எப்படியிருக்கின்றது என்று பார்த்தால் அவையும் பெண்கள் மீது வெறுப்பு கொண்ட தாகவும் காழ்ப்புணர்வை காட்டுவதாகவுமே உள்ளது.

**திருமணத்தின்பின் கணவனும் மனைவியும் ஒரு நாணயத்தின் இரு பக்கம் போன்றவர்கள். ஒன்றாக வேயிருந்தாலும் ஒருவருக்கொருவர் முகம் கொடுக் கமாட்டார்கள்.**

**திருமணத்தின் பொருள் என்ன? நல்ல மனைவி கிடைத்தால் சந்தோசமாயிருப்பாய் கெட்ட மனைவி கிடைத்தால் நீயொரு தத்துவ ஞானியாவாய்.**

நான் பயங்கரவாதத்தை பற்றி கவலைப்படவில்லை. ஏனெனில் திருமணமாகிவிட்டது.

“நானும் எனது மனைவியும் இருபது வருடங்கள் சந்தோசமாக இருந்தோம். பின்னர் நாங்கள் சந்தித்தோம்”.

திருமணம் ஒரு யுத்தமாகும். அங்கு நீங்கள் எதிரியுடன் தூங்க வேண்டும்.

‘ஒருபோதும் விடைகாணப்படாத மாபெரும் வினா என்ன தெரியுமா? ஒரு பெண்ணுக்கு என்ன தேவை என்பதுதான்”

தாய்க்கும் மனைவிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

தாய் உன்னை அழுகையுடன் உலகுக்கு கொண்டு வந்தாள். மனைவி அதைத் தொடரவைக்கிறாள்.

“எனது இரு மனைவிமாரினாலும் எனக்கு துரதிஷ்டமே. முதலாவது மனைவி என்னை கைகழுவி விட்டாள், இரண்டாவது மனைவி என்னை கைவிட மாட்டேன் என்கிறாள்.

ஒருவர் பத்திரிகையில் “மனைவி வேண்டும்” என விளம்பரம் கொடுத்தார். மறுநாளே நூற்றுக்கணக்கான கடிதங்கள் குவிந்தன. எல்லாமே என்னுடைய மனைவியை ஏற்றுக்கொள் என்றிருந்தது. இந்த தத்துவங் களானது?! இளைஞர்கள் சிரிப்பதற்காக இதை அனுப்புங்கள் மேலும் நகைப்புணர்வு கொண்ட, இத்தத்துவங்களை கையாளக்கூடிய பெண்களுக் கும் அனுப்புங்கள் எனும் புறக்குறிப்பு இடப்பட்டிருந்தது. இவ்வாறு ஒவ்வொரு செய்தியும் திருமணம் மனைவி என்பன தமது சந்தோசத்தை அழிக்கும் செயல்களாகவே காட்டுகின்றது.

அடுத்ததாக ஒரு சிறிய கதை தலைப்பு ‘பெண்களை மதியுங்கள்” ஒரு நாள் ஒரு சிறுவன் தனது தாயிடம் வினவினான். அம்மா ஏன் அழுகிறீர்கள் என்று. தாயும் ‘நானொரு பெண்’ என்றாள். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தந்தையிடம் கேட்டான். அப்பா, அம்மா ஏன் அழுகிறார் என்று. எல்லாப் பெண்களுமே காரணமின்றி அழுவர் என்றார்

தந்தை. சிறியவன் வளர்ந்து பெரியவனாகும் வரை இக்கேள்விக்கு சரியான பதில் கிடைக்கவில்லை. ஒரு நாள் அவன் கடவுளிடம் சென்று கேட்டான்.

கடவுளே ஏன் பெண்கள் இலகுவில் அழுகிறார்கள்'. கடவுள் 'நான் பெண்ணைப் படைக்கும்போது அவளிடம் சில சிறப்பம்சங்கள் இருக்க வேண்டுமென நினைத்தேன். அவளுடைய தோள்கள் உலகைத் தாங்கும் பலங்கொண்டவையாகவும் கைகள் பட்டுப்போன்று மிருதுவானதாகவும் குழந்தை பிறக்கும் போதும், சிலவேளை பிள்ளைகளால் உதாசீனம் செய்யப்படும் போதும் தாங்கக்கூடிய மனோபலம் கொண்டவளாகவும், சகலரும் கைவிடும்போதும் சுகயீனமுற்று பலமற்று இருக்கும் போதும் எவ்வித முறைப்பாடுகளுமின்றி தனது குடும்பத்தையும் நண்பர்களையும் கவனிக்கக்கூடிய வல்லமை கொண்டவளாகவும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது பிள்ளை மீது பிரியம் கொண்டவளாகவும் எப்போதும் தனது கணவனது பிழை, அறியாமை மறந்து அவனுக்கு பக்கபலமாக இருக்கக்கூடிய சக்தி கொண்டவளாகவும் மேலும் நல்ல கணவன் அவளை துன்புறுத்த மாட்டான் சிலவேளை அவளை சோதிப்பதற்காக சில தவறுகளை விடுவான் என பகுத்தறியும் ஞானத்தையும் அவளுக்கு வழங்கியுள்ளேன்.

கடின உழைப்பின் போது கண்ணீர் அவளது பலவீனமானதாக தென்பட்டாலும் கூட "கண்ணீர்" ஆனந்தத்தின் போதும் துக்கத்தின் போதும் வெளிப்படுத்துவதற்கான அவளுக்கான விசேடமான கொடை அது என்றார் கடவுள்.

இந்தக் கதையின் மூலமாக பெண்களை பூசி, மெழுகி, உயர்வாகப் பேசி கடைசியில் கண்ணீர் பெண்ணுக்கே உரிய படைப்பாகவும், கணவன் சிலவேளைதான் தவறுவிடுவான் அதுவும் அவளைச் சோதிப்பதற்காக எனவும் இக்கதை சித்தரிக்கின்றது. மேலும் இம் மானசீகக் கதையை உங்கள் வாழ்க்கையில் பெண்களை கௌரவம் செய்வதற்காக மேலும் பல பெண்களுக்கு அனுப்புமாறு இம்மின்னஞ்சல் மூலம் கோரப்படுகின்றது.

வீட்டு வேலையா? சமையலா? அதைப் பெண்தான் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. பொருளாதார தேவைக்காக உணவு விடுதிகளில் தலைமை சமையல்காரர்களாகவும், பணியாட்களாகவும் இருப்பது யார்? சிந்திப்போம்.


நீண்ட திருமணத்திற்கான ரகசியங்கள் எனும் மின்னஞ்சல் பின்வருமாறு கூறுகின்றது. திருமண நினைவுநாளைக் கொண்டாட எங்கு போகலாம் என மனைவியிடம் கேட்டேன். அவளும் நீண்டகாலமாக நான் போகாத இடத்திற்கு கூட்டிப்போங்கள் என்றாள். ஆகவே என்னுடைய பதில் சமையலறைக்கு போகலாமா?

நேற்றைய மனைவி




இன்றைய மனைவி




கணவனால் தனது மனைவிக்கு எழுதப்பட்ட அழகான கவிதை களாம் இவை.

“உனது பெயரை மணலில் எழுதி னேன் அது அழிந்துவிட்டது.
உனது பெயரை காற்றில் எழுதினேன் அது அடித்துச் சென்று விட்டது.
உனது பெயரை எனது இதயத்தில் எழுதினேன் எனக்கு மாரடைப்பு வந்துவிட்டது?!”

பெண்ணை தாயாக, மனைவியாக, அன்னையாக, தியாகியாக, பூமாதேவியாக பல்வேறு வடிவங்களில் சித்தரிக்கும் எமது

சமூகத்தினால் நவீன வடிவில் பெண்ணை கேலிப் பொருளாக சித்தரிப்பதனூடாக பெண்ணடிமையினைக் காவும் கருத்துக்கள் மேற்கூறியவற்றில் உள்ளன. உலக சனத்தொகையில் அரை வாசிக்கும் மேலானோர் பெண்கள். வீட்டைக் கட்டியெழுப்புவது தொடக்கம் நாட்டைக் கட்டியெழுப்புவது வரை பெண்களும் சம பங்குதாரர்கள். ஒரு நீதியானதும் சமத்துவமானதும் சமூகத்தை உருவாக்க வேண்டுமெனில் சகலரும் கண்ணியமாக நடாத்தப் பட வேண்டும். ஆனால் மறுபுறமோ,
மோசமான இயல்புள்ளவர்களாக பெண்களை உருவாக்கி மேலும் மேலும் பெண் அடிமைத் தனத்தை வளர விடுவதற்கு இன்றைய நவீன, விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்துவது வேதனைக்குரியதும், கேலிக்குரியதுமான விடயமாகும்.

**நன்றி**

சான்றாதாரங்கள்:

குழு மின்னஞ்சல்கள்:

- ஹிந்தி ஜோக்ஸ்
- மும்பாய் ஹங் அவுட்
- PC வேர்ள்ட்
- Funlok.com

தனிப்பட்ட மின்னஞ்சல்கள்:

- லினோஜா நடராஜா
- கிருசாந்தி விக்கிரமாராச்சி
- சாணிக்க குடாகம.

# கேள்விகள்????

கேள்விகள் கேட்பதனால்
பெரியவர்களாகி இருப்பதாய்
நினைப்பவர் மத்தியில்
மௌனித்த உண்மைகள்
மரணித்து விட்டதாய்
கணக்கெடுக்க முடியாதவளாய்
நாட் கணக்கில்
நடந்து கொண்டே ... நான்.
பிரச்சனை தீர்ப்பது
தெளிந்த மனதுடன் அன்றி
விழித்த விழிகளுக்குள்
சந்தேக மைகளை நிரப்பி
முடிய முடிய நிரப்பி
நிற்க வைத்து
தோற்க வைக்கும்
உலகில் எதை மறுத்து
உலா வருவது எனும்
களைப்புடன்
சோர்ந்து விட்ட
உண்மைகளை கண்டும்
காணாதவளாய் நானும்

சில போது சேர்ந்து

உறவாடி ... எதைத் தக்க

வைக்க... எனும் நினைவு மீண்டெழ

அவர்களை

விட்டு விலகி.....

விலகாமலும்

நீர்க்குமிழி வாழ்க்கைக்குள்

நிலையாமை உண்மையை

போதிக்க

போதி மாதவன்

தேடும் பயணிகளில்

ஒருத்தியாய் இவ்வுலகில்

அலையும் என்

விடியல்கள் கேள்விகளாய்

இவர்களுடன்.

விஜயலக்சுமி சேகர்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
அன்புடன் ஆசிரியைக்கு.

நீங்கள் இந் நிறுவத்தினூடாக வழங்கி வரும் பல்வேறு சேவைகளும் உண்மையில் வரவேற்கத்தக்கது. போற்றத்தக்கது. இச் சேவைகளினூடாக சமூகத்துக்கும் பெண்களின் வாழ்கைக்கும் ஓர் புத்துணர்ச்சியை தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றீர்கள். இச் சேவைகளில் மிக முக்கியமானதாக "பெண்" சஞ்சிகையினை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியான விடயம். அது மட்டுமல்லாது பல்வேறு நாடுகளில் இருந்தும் நபர்கள், சகோதரிகள் அனுப்பும் ஆக்கங்களையும் உள்ளடக்குவது மிகவும் பெருமை யானது. இச் சேவையில் நானும் எனது மிகச்சிறிய பங்களிப்பை செய்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களது "பெண்" சஞ்சிகை எனக்கு தவறாமல், ஒழுங்காக வந்து சேர்கின்றது. என்னையும் உங்கள் சகோதரியாக உறுப்பினராக நினைத்து இந்த சஞ்சிகையை அனுப்புவதும், அதில் எனது ஆக்கங்களையும் சேர்த்துக் கொள்வதையும் நினைத்து மிகவும் சந்தோசமாகவுள்ளது.

உங்கள் சேவை இத்துடன் நின்றுவிடாமல் மென்மேலும் தொடர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். பல்வேறு சாதனைகளை புரிய வேண்டும். உங்கள் பணி தொடர என்னால் முடிந்த உதவிகளை செய்ய நான் தயாராகவுள்ளேன். ஏனெனில் இலை, மறை காயாய் இருந்த எனது திறமைகளை வெளிக்கொணர உங்கள் " பெண்" இதழ் களம் அமைத்துக் கொடுத்தது. எனக்கு மட்டுமல்ல என்னைப்போல் பலருக்கும் களம் அமைத்து கொடுத்திருக் கின்றது...அதற்கு எனது நன்றிக்கடனை முதலில் உங்களுக்கும் உங்கள் நிறுவனத்துக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்கள் பணி தொடர என் வாழ்த்துக்கள். இந்நிறுவனமும் அதில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும், நலமாகவும் சமாதானத் துடனும் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**லெவானா டக்லஸ்**

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
USS 5
இந்தியா
ரூபா 300.00
இலங்கை
ரூபா 100.00

சந்தா விண்ணப்பம் 200........................
பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.

பெயர் : ............................................................
விலாசம் : ............................................................
திகதி : ............................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.


**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல:20, டயஸ் வீதி,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No: 20, Dias Lane,
Batticaloa,
Sri Lanka.

## வருடாந்த சந்தா - டொலர்

இலங்கை, ரூ. [illegible]
[illegible]
US$ 5
[illegible]
ரூபா 300.00
[illegible]
ரூபா 100.00

பெயர் : ..............................

[illegible]

[illegible] : ..............................

விலாசம் : ..............................

திகதி : ..............................

[illegible]

[illegible]

Suriya Women's Development Centre,
No. 20, Dr. Lane,
Batticaloa,
Sri Lanka.



ISSN - 1391 - 6122